# நாற்று

பெண்கள் இருமாத இதழ்

வைகாசி ஆனி 1995



விலை 20/=

இன்றைய அறிமுகம் நாளைய நாகரிகம்

## முகூர்த்தப் பட்டுப் புடைவைகளை

உங்கள் விருப்பத்திற்கு தெரிவு செய்ய ஒரே இடம்

## சோபனா ஆடை அகம்

இறக்குமதி செய்யப்பட்ட சகலவிதமான
ஆடைகளும் பெற்றுக்கொள்ள நாடுங்கள்

## சோபனா ஆடை அகம்

16. பெரியகடை, யாழ்ப்பாணம்.

இன்றைய அறிமுகம் நாளைய நாகரிகம்

தேன்மதுரத் தென்றலாள் வான்பரப்பில்
வந்ததுபோல் யாழ்நகரில் வந்துதித்தாள்

மதுரா பட்டுமகால் — *Mathuta Silks*

75, மேஜர் சோதியா தெரு.
யாழ்ப்பாணம்.

75, Major Sothiya Road,
Jaffna.

- *ஆதரவாளர்களின் ஆவல் அறிந்த சேவை!*
- *மங்கள வைபவங்களுக்கான பட்டுப் புடைவைகள்!!*
- *இறக்குமதி செய்யப்பட்ட ஆடைத்தினுசுகள்!!!*

அனைத்திலும் குறைந்த விலையில்
நிறைந்த மகிழ்வுடன் பெற்றுக்கொள்ள
நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

## மதுரா பட்டு மகால்

75, மேஜர் சோதியா தெரு, யாழ்ப்பாணம்.
(பெரியகடை)

நன்றி! மீண்டும் வருக!!

மாநகராட்சி
10-7-1995
யாழ்ப்பாண
பொது நூலகம்
மா நகர சபை
யாழ்ப்பாணம்





'' பெண்ணுக்கு விடுதலை நீரில்லை என்றால்
பின்னிந்த உலகினிலே வாழ்க்கையில்லை''

அபிவிருத்தியில் பெண்களின் பங்கு என்ற விடயம் உலகளாவிய ரீதியில் இன்று ஆய்வுக்குரிய பொருளாக உள்ளது. பல்தேசிய சர்வதேச அமைப்புகள் இவ்விடயம் மீது தமது தீவிர கவனத்தைத் திருப்பியுள்ளன. அபிவிருத்திச் செய்முறையில் பெண்களை ஒருங்கிணைத்தல் என்ற செயல் முறை சமனற்ற நிலையில் உள்ளது என்ற குறைபாடு பெண்கள் மத்தியில் நிலவுகின்றது. கல்வி, நிலம், வருமானம் போன்ற அனைத்து வளங்களையும் ஆண், பெண் இருபாலாரும் சமமான முறையில் அணுகும் வாய்ப்பை உறுதிப்படுத்தினால் தான் அபிவிருத்தியில் பெண்களை ஒருங்கிணைத்தல் செய்முறையானது பூரணத்துவமடைய வாய்ப்புண்டு. மற்றைய வளங்களை திறமையான முறையில் நிர்வகிப்பதற்கு கல்வி அடிப்படைத் தேவையாக இருப்பதனால் கல்வி மீதான சமனான அணுகுகை மிக முக்கியமான தொன்றாகும்.

பெண் கல்வி மீதான முதலீடு என்பது ஒரு சமூகத்தின் சமூக பொருளாதார மேம்பாட்டிற்கான மிகப் பெரிய இலாபம் தரும் நடவடிக்கையாகவே கருதப்படுகிறது. ஒரு ஆணுக்குப் புகட்டப்படும் கல்வியறிவானது அத் தனிநபருக்கான கல்வியாக மட்டுமே இருக்கும். அதே வேளை ஒரு பெண்ணுக்குப் புகட்டப்படும் கல்வியானது ஒரு குடும்பம் முழுவதையுமே கல்வியறிவுடையவர்களாக்குவதற்குச் சமனாகும் என்ற அடிப்படை

உண்மை இன்னமும் சமூக மேம்பாட்டுத் திட்டங்களை வகுக்கும் திட்டவியலாளர்களினாலோ ஏன் அரசுகளினாலோ கூட அங்கீகரிக்கப்படாத தொன்றாகவே இருந்து வருகின்றது.

பெண்கள் கல்வியானது வேலை வாய்ப்பை, உழைக்கும் திறனை, உடல் நலத்தை கரு உற்பத்தி தன்மையை, குடும்பத்தின் அளவை, குடும்பத்தின் கல்வியை, சுகாதாரத்தைத் தீர்மானிக்கும் ஒரு கருவியாக காணப்படுவதிலிருந்து எழுத்தறிவு, உடல் நலம், பொருளாதார அரசியல் சக்தி என்பனவற்றிற்கிடையில் பரஸ்பர தொடர்பு இருப்பதை நாம் அறிந்து கொள்ளலாம். இது மட்டுமன்றி சமூக தப்பபிப்பிராயங்களைக் களைவதற்கும், வாழ்க்கையில் ஒரு ஒழுங்குத் தன்மையை பேணுவதற்கும், வெறுமனே குழந்தை உற்பத்திக் கருவியாக இருப்பதற்கும் மேலாக ஒரு அடையாளத்தைக் கொண்டிருப்பதற்கும் கல்வியானது பெண்ணுக்கு உதவுகிறது. அத்துடன் பெண்ணுக்கு எதிரான பாலியல் நடத்தையை ஒரு ஒழுங்குக்குக் கொண்டு வரும் சக்தி வாய்ந்த ஆயுதமாகவும் இது காணப்படுகின்றது.

உலகில் வழங்கும் கட்டுக்கதைகள், புராணக் கதைகள் கூட பெண்ணை மிக உயர் நிலையிலான அறிவுப் பெறுகையுடையவளாக சித்திரிக்கின்றது. எகிப்தியர்களில் எழுத்தை உருவாக்குவதில் இராணி (ISIS) என்றவரது பங்களிப்பும் சமஸ்கிருத எழுத்தை முதன் முதல் கண்டு பிடித்ததாக இந்திய தெய்வமான காளியும் இக்கதைகளில் உலாவருகின்றார்கள் உலகின் முதல் நாவலாகக் கருதப்படுகின்ற "The Tale of Genji" என்ற நாவல்கூட 11 ஆம் நூற்றாண்டில் யப்பானில் முரசாகி என்ற பெண்ணால் எழுதப்பட்டதாக கூறப்படுகின்றது.

இத்தகைய உதாரணங்கள் ஆணுடமைச் சமுதாயத்திற்கு முன்பு உலக அறிவின் மையப்பகுதியில் பெண்கள் மிக முக்கிய பங்கை வகித்தார்கள் என்பதை காட்டி நிற்கின்றது. ஆணுடமைச் சமுதாயத்தில் பெண்ணுக்கு கல்வியுரிமை மறுக்கப்பட்டதுடன் இன்றும் அதன் அச்

சங்களால் இவ்வுலகு ஆளப்படுகின்றது. கல்வியானது பெண்களுக்கு எட்டாப்பழமாக இருக்க ஆண்களுக்கு ஒரு முக்கிய தேவையாகக் கருதப்படும், இக் கால கட்டத்தில் கூட பல பெண்கள் இத்தடைகளையெல்லாம் உடைத்தெறிந்து அறிவுத்துறையில் அனைத்துப் பகுதிகளிலும் அகலக் கால் பதித்துள்ளார்கள். பெண்களை பெரும்பாலும் தவிர்க்கின்ற மதம், அரசியல், இராணுவம் போன்ற துறைகளாயினும் சரி,அதி உயர் தொழில்நுட்பத் துறையாயினும் சரி, அல்லது அனைத்துலக சமாதானத்திற்கான அமைதிப் படையிலும் சரி தேசிய விடுதலைப் போரிலும் சரி பெண்கள் தமது முத்திரையை பதித்துள்ளமை பெண்ணினத்தையே பெருமை கொள்ளச் செய்கின்றது.

இவ்வடிப்படையில் நோக்கும் போது பெண்ணின் உயர்விற்கு, பெண்ணின் பெருமைக்கு அடிப்படை கல்வி தான். குஞ்சியழகோ, கொடுந் தானைக் கோட்டழகோ, மஞ்சள் அழகோ பெண்ணுக்கு அழகல்ல, பெண்ணுக்கு கல்வியழகு தான் அழகு என்பதை எடுத்துரைக்கும் எமது பழைய இலக்கியப்பாடலுக்கு அணி செய்யும் வகையில் பெண்கள் கல்விக்கு முக்கியத்துவம் கொடுப்பவர்களாக. தாமும் சிறந்து தமது குடும்பத்தை சிறப்பித்து, தான் வாழும் சமூகத்தை, தேசத்தை சிறப்பித்து வாழ வேண்டும் என்பதை நாற்று எதிர்பார்க்கின்றது. ○

"சிகரங்களை நோக்கி" நாற்று நடாத்திய கவிதைப் போட்டியில் வெற்றியீட்டியவர்

ந. சுதர்சனா

ஞானப்பிரகாசர் வீதி, ஆனந்தபுரம்,
கிளிநொச்சி.

இவருக்குரிய பரிசை நாற்று செயலகத்தில் நேரில் பெற்றுக் கொள்ளலாம்.

வெற்றி பெற்ற கவிதை அடுத்த இதழில் வரும்

நாற்று

வைகாசி – ஆனி 95
'நாற்று'

☐ உருவாக்கம்
ஆசிரியர்குழு

☐ ஓவியங்கள்
தயா

☐ அச்சுப்பதிப்பு
மாறன் பதிப்பகம்
யாழ்ப்பாணம்.

☐ இதழமைப்பு
சிறீ வாணி

☐ தொடர்புகள்
நாற்று பணியகம்
இராச வீதி, கல்வியங்காடு,
கோப்பாய்.

உள்ளே துளிர் விடுபவை.


✻ பெண்களும் தமிழீழச் சட்டங்களும் உண்மைச் சம்பவம் 05
✻ தமிழிலக்கியத்தில் பெண்களின் இழிதகைமைகள் 09
✻ பாக்கியம் மாமியும் பரமேசுவரியும் 15
✻ பெண்ணுக்கு எதிரி? 18
✻ உல்லாசப் பெண்கள் 21
✻ களை எடுப்பு 30
✻ வாழநினைத்தால்வாழலாம் 32
✻ அட்டிகை 34
✻ இது இவர்களைப் பற்றி 43
✻ நேர்காணல் 47

வண்ணார்பண்ணை கிளை நூலகம்
மாநகர சபை
யாழ்ப்பாணம்



# பெண்களும் தமிழீழச் சட்டங்களும்.

(உண்மைச் சம்பவம்)

– தமயந்தி

**வ**தனாவும், சுதாவும் சினேகிதிகள். வதனா ஒரு பாடசாலையில் பத்தாம் ஆண்டிலும், சுதா வேறொரு பாடசாலையில் எட்டாம் ஆண்டிலும் படித்து வந்தார்கள். வதனாவுக்கு பத்தொன்பது வயது - அழகான தோற்றம் சிவந்த நிறம். மிகவும் கஷ்டநிலையுள்ள குடும்பம். அண்ணா ரவிச்சந்திரன், அம்மா, தங்கை ஆகியோர் கொண்ட குடும்பம். சிறிய மண்வீடு. வன்னிப்புறக் கிராமம் பெருங்காடு சூழ்ந்த கிராமம், வீதிகளிலிருந்து பிரியும் ஒற்றையடி நடைபாதைகளை தொடர்ந்து சென்றால் குடிசைகளையும் விவசாய நிலங்களையும் காணலாம். வீதி முழுதுமாக குருமண் பற்றைகள் மண்டியிருக்கும். ஒரு வீட்டுக்கும் மற்ற வீட்டிற்கும் இடையே ஏக்கர் கணக்கில் இடைவெளியிருக்கும். வதனாவின் வீட்டையடுத்து பற்றைகளடர்ந்த காணியொன்றுண்டு அதையடுத்து கிணற்றுடன் கூடிய மந்துக்காணி; பத்து ஏக்கரளவுண்டு. இந்த நிலத்தில் ரவிச்சந்திரன் உழுந்து கொத்துவதற்கான திட்டம் போட்டிருந்தான். அந்த வேளையில்தான் அவனுடைய நண்பனின் குடும்பம் அங்கு வந்தது. காந்தனும் அவனுடைய வயதான தாயும்தான். அவனுடைய தாயாருக்கு கண் அவ்வளவாகத் தெரியாது. வன்னி விக்ரம இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்து வந்திருந்தார்கள். அவன் கொஞ்சம் பணம் வைத்திருந்தான். சும்மா இருக்காமல் விவசாயம் செய்யலாம் எனவும் விரும்பினான்.

போதிய பணமில்லாமல் நிலத்தை மட்டும் வைத்திருந்த ரவிச்சந்திரன் இருவருமாக அந்த நிலத்தில் தோட்டம் செய்யலாம் என்ற யோசனையை சொன்னான். இருவரும் பங்காக விவசாயம் செய்ய ஆரம்பித்தனர், தோட்ட வேலைகளில் ரவிச்சந்திரனின் குடும்பம் முழுமையாக ஈடுபட்டது. காந்தன் தன் பங்கு வேலை செய்தான்.

நிலமை சீராகவே காந்தனின் தாய் சொந்தவீட்டுக்கு போய்விட்டாள். காந்தன் தோட்டம் காரணமாக ரவியின் வீட்டிலேயே தங்கியிருந்தான்.

சுதா தன் சிநேகிதியைப் பார்க்க அடிக்கடி வதனாவீட்டுக்கு வருவதுண்டு. அப்போது அங்கு தங்கியிருக்கும் காந்தனை சந்திப்பதுண்டு. சுதாவின் குடும்பம் ஓரளவு செல்வாக்கானது. வயது பதினேழு அம்மா, அப்பா, அண்ணாமார் நான்குபேர். இவள் ஒரே பெண் செல்லப்பெண்ணும் கூட, இவளுடைய பிறந்த நாள் கொண்டாட்டம் வந்தது. இரண்டு ஒழுங்கை தள்ளியுள்ள வதனாவீட்டுக்காரர்களுக்கு பலகாரம் கொண்டு போய் கொடுத்தாள். அவர்களை விருந்துக்கும் அழைத்தாள். காந்தனையும் சேர்த்து அழைக்கவே இரவு விருந்துக்கு வதனா, ரவி, காந்தன் ஆகியோர் சுதாவீட்டுக்கு சென்றனர். நாளாவட்டத்தில் காந்தன் சுதாவின் அண்ணன்களுக்கும் நெருங்கிய நண்பனானான்.

ரவியும், காந்தனும் செய்கை பண்ணிய தோட்டத்திற்கு இரவுக்காவல் போடவேண்டியிருந்தது. ரவி குடும்பத்தேவைக்கு வெளியிலும் உழைக்கவேண்டியிருந்ததால், வேலியடைப்பு காவல் கொட்டில் அமைப்பு போன்ற வேலைகளில் வதனா உதவி வந்தாள். இருவருக்கும் ஒரு நெருக்கம் உருவாகிவந்தது.

ஒருநாள் வதனா பாடசாலைக்குப் போனாள். அன்று சிறிலங்கா அரசு ஊரடங்கு பிறப்பித்திருந்தது. வானொலி இன்மையால் கிராமமக்களுக்கு இது தெரியாது. இந்த மக்களுக்கு நகரத்திலிருந்து வருபவர்கள் தான் செய்தியாளர்கள். எனவே எது நடந்தாலும் மாலையில் அல்லது மறுநாள் தான் தெரியும். வதனாவும் தன் வீட்டிலிருந்து ஆறு மைல்களுக்கப்பால் உள்ள பாடசாலைக்கு போன பின்னர் தான் பாடசாலை இல்லை என்பது தெரிந்தது. வீட்டுக்குத் திரும்பி வரும்போது காந்தன் ஒரு சைக்கிளில் வந்தான். பாடசாலை இல்லாத படியால் தன்னுடைய தாயாரைப் பார்த்துவிட்டுப் போகலாம் என்றும் தன்னுடன் வரும்படியும் கேட்டான். அவனுடைய தாய் வீடு பாடசாலையிலிருந்து எதிர்ப்புறமாக ஒன்றரை மைல் தொலைவில் இருந்தது. வதனா மறுக்காமல் அவனுடன் ஏறிக் கொண்டாள். வீட்டுக்குப் போனபின்தான் அங்கு எவரும் இல்லை என்பதும் அவனுடைய தாயார் வேறிடத்தில் வசிக்கும் மகளிடம் போயிருந்ததும் தெரிந்தது, வதனா வீட்டுக்குப் போகலாம் என்று கூறவே காந்தன் அவளை சமாதானப்படுத்தி அம்மா இப்போது வந்து விடுவார் என்று கூறிநிறுத்தினான்.

மாலை ஐந்து மணிக்கு வழமைபோல வீடுவரும் வதனா வரவில்லை. ரவிச்சந்திரன் நகரத்துக்குள் போனவன் வரவில்லை ஆனால் வதனாவுக்கு இன்று பாடசாலை இல்லை என்ற செய்தி நன்கு இருட்டியபிறகே தெரிந்தது. தேடிச்செல்ல எவரும் இல்லாமையால் தாயும் தங்கையும் குழப்பத்துடன் இரவுப் பொழுதைக் கழித்தனர். விடிந்ததும் தேட ஆயத்தம் செய்தனர். பாடசாலைத் தோழியொருத்தி வதனா காந்தனுடன் சென்றதாக கூறவே காந்தனுடைய வீட்டுக்கு சென்றனர். ஆனால் காந்தன் வதனாவுடன் வீட்டுக்கு சென்று விட்டான்.

அம்மாவுக்கு கோபம் ஏற்பட்டது வதனாவை இனிப் பாடசாலைக்குப் போகவேண்டாம் என மறித்து விட்டார். (பாவம் முழுத்தவறும் இங்குதான் என்பதை அவர் அறியவில்லை)

சுதா வயலில் வேலை செய்த அண்ணாக்களுக்கு தேனீர் கொடுப்பதற்காகச் சென்றாள். சுமார் முக்கால் மைல் தொலைவில் வயல்பரப்பு இருந்தது. வழியோ ஆள்மறையும் உயரப் பற்றைகளைக் கொண்டது. எப்பொழுதும் போகும் பாதை தான் அச்சமில்லாமல் போனாள். திடீரென பற்றை மறைவிலிருந்து காந்தன் வெளிப்பட்டான். தன்னுடன் வரும்படி சுதாவை கேட்கவே சுதா மறுத்து அழ ஆரம்பித்தாள். காந்தன் அவளுடைய தோளைத்தொட்டு அழவேண்டாம் என்றும் தான் அவளை நேசிப்பதாகவும் கூறினான்.சுதா அழுது கொண்டிருக்கும் போதே அவளைப் பற்றைக்குள் தள்ளிச்சென்றான். வீட்டில் யாருக்கும் சொல்லக்கூடாது என்றும் சொன்னால் நான் செத்துப் போவேன் என்றும் கூறியதோடு செத்தால் பேயாக வந்து உங்களை உருக்குலைப்பேன் என்றும் கூறி வைத்தான்

அந்தக் கிராமம் மூடநம்பிக்கைகளுக்கு பேர்போனது. பேய் பிசாசுகளிலும் பூசாரிகளிலும் நம்பிக்கையுடையது. எனவே சுதா பயந்து வீட்டில் சொல்லவில்லை.

மேலும் சில தடவைகள் காந்தன் இவ்வாறு நடந்து கொண்டான். இப்போது தான் அவளை திருமணம் செய்து கொள்வதாக உறுதியளித்தான். மாதங்கள் சென்றன. சுதா வெள்ளை சீருடையணியும் போது வயிறு பெரிதாக தெரியவே பாடசாலைக்குச் செல்வதை நிறுத்தி விட்டாள். தொளதொளத்த உடைகளை அணிவதன் மூலமும் வெளிநடமாட்டங்களைக் குறைத்ததன் மூலமும் ஊராரும், பெற்றாரும் அறியாமல் மறைத்தாள். அப்படியும் உடல் பருக்கிறதே என்று வைத்தியசாலைக்கும் அனுப்பி வைத்தார்கள். மருந்துகொடுத்துப் பார்த்தும் யாருக்கும் புரியவில்லை.

திடீரென ஒரு நாள் பிரசவவலி கண்டபோது சாதாரண வயிற்று வலி என நினைத்து உள்ளி மிளகு போன்ற கைமருந்துகள் கொடுத்துப் பார்த்து சரிவராமல் போகவே அங்கிருந்து ஒரு மைல் தொலைவில் வசித்த ஒரு நாட்டு வைத்தியரை அழைத்து வந்தனர். வைத்தியர் ஐம்பது வயது கடந்தவர். வந்து பார்த்தவர் கோபத்தோடு கேட்டார். நான் என்ன மருத்துவிச்சியே? என்று. அருமை தங்கைக்கு என்ன வியாதி என்று அறிந்த அண்ணன்கள் துடித்துப் போனார்கள் அவர்களில் ஒருவன் தலையிலடித்துக் கொண்டுவீதியில் ஓடினான். மீண்டும் வீட்டுக்கு வரவில்லை. அழகான ஆரோக்கியமான ஆண்குழந்தை பிறந்தது.

காந்தனைத் தேடி கைது செய்தபோது காந்தன் தனக்கு இதைப்பற்றி எதுவும் தெரியாது என்றும் தான் வதனாவைத் திருமணம் செய்ய இருப்பதாகவும் கூறினான். வதனாவும் நிறைமாத கர்ப்பவதியாய் இருந்தாள். சுதா பிரசவித்து இருபது நாட்களின் பின் வதனாவும் ஆண்குழந்தையைப் பெற்றாள்.

காந்தன் ஒரே தடவையில் இரு பெண்களை ஏமாற்றியிருக்கிறான் என்பது சந்தேகத்துக்கிடமின்றி தெளிவாயிற்று. ஆனாலும் பெண்கள் ஓரளவு இசைந்துதான் போயிருக்கின்றனர். தத்தமக்கு ஏற்பட்ட நிலையை அவர்கள் ஒருவரோடொருவர் பரிமாறிக்கொள்ளமுடியவில்லை.

காரணம் சுதா தானாக வெளியே போவதை நிறுத்தியிருந்தாள்; வதனாவை தாய் வெளியே விடாமல் தடுத்திருந்தாள். வதனாவின் நிலை குடும்பத்தினருக்கு தெரிந்திருந்தது. நாலு மாதங்களின் பின் தாலிகட்டக்கூடாது என்பதாலும் காந்தன் ஓரளவு திருமணம் செய்யும் நம்பிக்கையை கொடுத்திருந்ததாலும் பேசாமல் இருந்தனர். விடயம் வெளியான போது இரு வீட்டாரும் அவனை வெறுப்போடுதான் பார்த்தார்கள்.

சுதா, அவனை எனக்கு தேவையில்லை பிள்ளைக்கு மட்டும் பதிவு செய்தால் போதும் என்றாள்,

வதனா எதுவும் கூறவில்லை. ஏழ்மையில் வாடும் பெண் தனக்காக வாதாடக்கூட முயலவில்லை; காந்தன் தண்டனை பெற்றான்.

பெண்கள் எங்கு வேண்டுமானாலும் எவருடன் வேண்டுமானாலும் சுற்றலாம். அதுதான் பெண் விடுதலை என்று எண்ணுவோர்களே! எங்கள் நாடு அமெரிக்கா அல்ல தமிழீழம். எங்களுடைய வாழ்வு தனித்துவமானது. அதனால் தான் எங்கள் மண்ணில் சுதாக்களும் வதனாக்களும் கண்ணீர் விடவேண்டியுள்ளது. தண்டனை முடிந்து காந்தன் வதனாவுடன் வாழத்தொடங்கியுள்ளான்.

சுதா.........?

# தமிழிலக்கியத்தில் பெண்களின் இழிதகைமைகள்

மனோன்மணி சண்முகதாஸ், எம். ஏ.

(சென்ற இதழ் தொடர்ச்சி)

இரட்டைக் காப்பியங்களுக்குப் பின்னர் தோன்றிய நீதிநெறி புகட்டும் இலக்கியங்கள் பெண்களை மேலும் இழிவுபடுத்தப் பல செய்திகளைத் தொகுத்துக் கூறின. திருக்குறளில் பெண் வழிச் சேறல் என்னும் பகுதியில் உள்ள குறள்கள் பெண்களை இழிவுபடுத்துவனவாக உள்ளன.

'அறவினையும் ஆன்றபொருளும் பிறவினையும்

பெண்ஏவல் செய்வார்கள் இல்'

என்ற குறள் உச்சநிலையில் பெண்ணுக்கு ஏவல் செய்யும் ஆணைப் பழித்துரைக்கின்றது. பெண்ணின் தலைமைத்துவம் அக்காலத்தில் இழிவு செய்யப்பட்டுள்ளது. இல்லாளுக்குத் தாழ்ந்து நடக்கக்கூடாது என்று திருக்குறள் நீதி பேசுகின்றது. வாழ்க்கைத்துணை நலம் எனப் பெண்ணைப் புகழ்ந்து பேசிய குறளில் பெண்ணை இழிவுபடுத்தும் கருத்துக்களும் கூறப்பட்டுள்ளன. பெண்ணுக்குக் கற்பின் திண்மையே பெருமை எனக் கூறும் குறள் 'கூடாநட்பு' என்னும் பகுதியில் அவளை இழித்துரைக்கின்றது.

''இனம்போன்று இனமல்லார் கேண்மை மகளிர்

மனம் போல வேறுபடும்''

தடுமாறக்கூடிய மனமுடையோராகப் பெண்களை இக்குறள் பழித்துரைக்கின்றது. வரைவின் மகளிர் என்னும் பகுதியில் வள்ளுவர் ஒழுக்கத்திலே வரையறையில்லாத பெண்கள் எனச் சாடுகின்றார். ஆனால் அத்தகைய பெண்கள் உருவாவதற்கு ஏதுவாக இருந்த ஆண்களைத் திருத்துவதற்கு சமூகம் ஏதாவது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதைத் திருக்குறள் கூறமுற்படவில்லை.

திருக்குறளைப் பின்பற்றியே பின்வந்த நீதி இலக்கியங்கள் பெண் நலத்துக்கு ஆதரவுக்குரல்

கொடுத்தாலும் பெண்களின் இழிதகைமைகளைக் கண்டித்துப் பேச முற்படவில்லை. பெண்மையின் மரபான பண்புகளையே விரித்துப் பேசுவதாய் அமைந்தன. நாலடியார் செய்யுள் ஒன்று பெண் கல்வியைப் பற்றிக் கூறுகிறது.

''குஞ்சியழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல - நெஞ்சத்து
நல்லம்யாம் என்றும் நடுவு நிலைமையால்
கல்வி யழகே அழகு''

தலைமயிரின அழகும் கோடிய ஆடையினது கொடுந்திரையின் அழகும் மஞ்சளால் வந்த அழகும் அழகல்ல. நெஞ்சத்தின் கண்ணுள்ள நடுவுநிலைமையால் நல்லேம் யாமென்று தாந்தம்மை அறியப்படுங்கல்வி அழகே ஒருவர்க்கு உண்மையான அழகாகும். இதேகருத்தினை ஏலாதி என்ற நூலும் எடுத்துரைத்துள்ளது.

''இடைவனப்பும் தோள்வனப்பும் ஈடின்வனப்பும்
நடைவனப்பு நாணின்வனப்பும் - புடைசால்
கழுத்தின் வனப்பும் வனப்பல்ல எண்ணோடு
எழுத்தின் வனப்பே வனப்பு''

ஆனால் பெண்ணுக்குக் கல்வி வேண்டும் என்று பேசிய நாலடியாரே பெண்களை இழிவுபடுத்தும் வகையில் 'பொதுமகளிர்' என்னும் பகுதியில் பெண்களைப் பற்றிக் கடுமையாக விமர்சனஞ் செய்கின்றது. குலமகளிர், பொதுமகளிர் எனப் பெண்களைப் பகுத்துக் காட்டுகின்றது. பெண்களின் நட்பை மிகவும் இழிமைப் படுத்துவதாக நாலடியாரில் ஒரு பாடல் அமைந்துள்ளது.

''புதுப்புனலும் பூங்குழையார் நட்பும் இரண்டும்
விதுப்புற நாடின்வே றல்ல - புதுப்புனலும்
மாரி அறவே அறுமே அவரன்பும்
வாரி அறவே அறம்''

பொருளுக்காகவே பெண்கள் ஆண்களோடு தொடர்பு கொள்வர் என்ற கருத்து பிற்கால இலக்கியங்களிலும் ஒரு மரபாகப் பேணப்படுவதற்கு இத்தகைய செய்யுட்களும் ஏதுக்களாயமைந்தனவெனலாம். பெண்ணுடைய கல்வியானது அவளுக்குப் பொருளாதார உரிமையைக் கொடுப்பதற்குப் பயன்படவில்லை. பெண்கள் எப்போதும் ஆண்களையே சார்ந்து வாழ வேண்டியவர்களாகவே கணிக்கப்பட்டனர்.

பெண்ணின் தொடர்பு ஆணுக்குத் துன்பந்தருவது என்னும் எண்ணம் சமூகத்திலே ஆழமாகப் பதிந்து போனமையால் அதனையே பொதுவான கருத்தாகவும் பலரும் கொள்ள இடமுண்டாயிற்று. ஆசாரக்கோவையில்

வரும் பாடல் ஒன்று ஆண் பெண் தொடர்புநிலையில் ஒரு மிக இழிவான கருத்தை வெளியிட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

''ஈன்றாள் மகள்தன் உடன்
பிறந்தா ளாயினும்
சான்றார் தமித்தா உறையற்க
ஐம்புலனும்
தாங்கற் கரிதாக லான்''

உலகத்துப் பெண்கள் எல்லோரையுமே இழிவான நிலைக்கு இப்பாடல் தள்ளுகிறது. சான்றோர் எனப்பாராட்டப்படுபவர் பெண்களிடம் அடக்கமாக நடந்து கொள்ளமாட்டார்கள் என்ற இப்பாடலின் கருத்து ஆசாரக்கோவையில் இடம்பெற்றிருப்பது பெண்களின் இழிதகைமைகள் பிற்காலத்தில் அவர்களுக்கு ஆண்களினாலேயே கொடுக்கப்பட்டன என்பதனைச் சான்றுகாட்டி நிற்கின்றது. தனது தாயையும், மகளையும் உடன் பிறந்தவளையும் உரிய உறவு நிலையிலேபேண முடியாத ஆணைக் கண்டிக்க எந்த இலக்கியமுமே முன்வர வில்லை. அதற்கு மாறாக மனை வாழ்க்கையே தேவையில்லை என்ற கருத்தே பரவலாயிற்று.

பக்தி இலக்கியங்களிலே பெண்கள் இறைவனைச் சென்றடைவதற்கு ஆண்களைத் தடுக்கின்றவர்களாகக் காட்டப்படுகின்றனர். தொண்டரடிப்பொடி, மதுரகவி, திருமங்கை போன்ற ஆழ்வார்கள் பெண் உறவு இறையருளையடையத் தடையானது என்று பாடுகின்றனர். மணிவாசகரும் பாடிய திருவாசகங்களிலே இதனையே பலபாடல்களில் குறிப்பிட்டுள்ளார். பக்தி இலக்கியங்களிலே இவ்வாறு பெண்கள் ஆன்மஈடேற்றத்திற்கே தடையானவர்கள் என்று பேசப்பட்டதால் பிற்பட்ட காவியங்களிலும் பெணகள் இழித்துரைக்கப்பட ஏதுவாயிற்று. சீவகசிந்தாமணியிலே பெண் பந்தயப் பொருளாக்கப்படுகின்றாள். ஆணுக்கு அடிமையாக வாழ வேண்டியவளாகின்றாள். கம்பராமாயணம் பாலகாண்டப் பாடல்களிலே பெண்மையின் இழிவு பரவலாகப் பேசப்படுகிறது. பேதமை, அழுகை, என்பன பெண்ணின் பண்புகளாகத் திருப்பித் திருப்பிக் கூறப்படுகின்றன. சீதையைப் பிரிந்த இராமன் மனநிலை எட்டுப் பாடல்களிலே கூறப்பட இராமனைப் பிரிந்த சீதையின் நிலை பலபாடல்களிலே விரிவாகப் பேசப்படுகிறது. பெண்களின் உடல் உறுப்பு வர்ணனைகள் மிகவும் கீழ்த்தரமான நிலையிலே அமைந்துள்ளன. பெரியபுராணம் மனைவியையே இன்னொருவருக்கும் கொடுக்கும் நடைமுறையைக் காட்டுகிறது. கலியநாயனார் மனைவியை விற்க முயற்சி செய்கிறார். பெண்ணின் உடலழகு கணவன் இல்லாவிடில் நீக்கப்பட வேண்டியதெனக் கருதப்பட்டது. அரிச்சந்திரபுராணம்

பெண் பிறப்பே இழிவான பிறப்பு எனப் பேசுகிறது. திருவிளையாடற்புராணத்திலே உடல் நிலையான கொடுமைகள் பற்றிய செய்திகள் உள்ளன. பெண் குழந்தையையே வெறுக்கின்ற நிலைமை மலையத்துவசன் வரலாற்றின் மூலம் கூறப்படுகிறது. தடாதகை தன் திருமணத்திற்கு நாடும் செல்வமும் தந்து திருமணம் செய்த வரலாறு திருவிளையாடற்புராணத்திற் கூறப்படுகின்றது.

பின்னர்த்தோன்றிய சிற்றிலக்கியங்களும், இதே மரபினைப் பின்பற்றி உலாக்காட்சிகள் மூலம் பெண்களின் பண்புகளை இழிதகைமைகளாக்கின. கலிங்கத்துப் பரணி, நந்திக்கலம்பகம், அம்பிகாபதிக்கோவை போன்ற சிற்றிலக்கியங்களிலே பல பாடல்களை இதற்குச் சான்றாகக் காட்டலாம். இதேவழியிலே பிற்பட்ட காலத்துச் சித்தர்களும், பட்டினத்தார், அருணகிரிநாதர் போன்றவர்கள் பெண்ணுறவு மாயை, மறலிவிட்டதூது, மாயப் பிசாசு, மயக்கும் பண்புடையது என்றெல்லாம் இழித்துப் பாடிச் சென்றுள்ளனர்.

''முட்டற்ற மஞ்சளை எண்
ணெயிற் கூட்டி முகமினுக்கி
மெட்டிட்டுப் பொட்டிட்டுப்
பித்தளை ஓலை விளக்கியிட்டுப்
பட்டப் பகலில் வெளிமயக்கே
செயும் பாவையர்மேல்
இட்டத்தை நீதவிர்ப் பாயிறை
வாகச்சி ஏகம்பனே''

என்னும் பட்டினத்தார் பாடல் பெண்கள் தம்மை அழகுசெய்வதையே இழித்துப் பேசுகிறது.

''பெண்ணாகி வந்ததொரு
மாயப் பிசாசம் பிடித்திட்
டென்னைக்
கண்ணால் வெருட்டி முலை
யால் மயக்கிக் கடிதடத்துப்
புண்ணாங் குழியிடைத் தள்ளி
யென் போதப்பொருள் பறிக்க
எண்ணா துனைமறந்
தேனிறை வாகச்சி ஏகம்
பனே''

என்னும் பட்டினத்தார் பாடல் பெண்ணை மாயப்பிசாசு என உருவகிக்கின்றது. பெண்களை இழித்துப் பாடுவதன் மூலம் தமது புலனடக்கத்திற்கு வழி தேடியவர்களாகவே இவர்கள் விளங்கினர். காமவயப்பட்டோர் அறிவால் அதை அடக்கும் வல்லமை பெற்றிருக்க வேண்டும். இல்லாவிடில் அவரை அறிவுடையோரெனக் கொள்ள முடியாது. சித்தர்களது பாடல்களிலே பெண்ணாசை என்ற நிலைபற்றி அதிகம் பேசப்பட்டுள்ளது. மனிதன் மண், பொன், பெண் என்ற மூன்றின் மீதும் ஆவலாக இருப்பின் நல்ல நிலையை அடையமாட்டான். இவற்றைக் கண்டு ஆசைப்படாது ஒதுங்கி வாழும் ஆற்றல் அற்ற ஆண்மகன் பெண்ணைப் பேய் என்றும் பிசாசென்றும் கூறித் தூற்றத் தொடங்கினான்.

பெண்கள் பற்றிய இழிதகைமை இவ்வாறு சமூகத்திலே காலங் காலமாகப் பேணப்படலாயிற்று. இலக்கியங்களிலே நேரடியாகவும் மறைமுகமாகவும் இவை பேசப்பட்டுள்ளன. பெண்ணின் தோற்றநிலையிலே இயற்கைக்கு மாறான தன்மைகளையும் இலக்கியங்கள் கற்பித்துக் கூறியுள்ளன. ஆண்மைக் கலப்புச் சேர்ந்த பெண் வடிவங்களும், தோற்றங்களும் பாடல்களிலே விரிவாக விளக்கப்பட்டுள்ளன. பெண்ணை அணங்கு, ஆர், பேய், பரத்தை, வஞ்சகி என அழைக்கின்ற மரபும் ஏற்பட்டது. பெண் ஆணுடைய ஆக்க நிலையான செயற்பாடுகளுக்கு இடையூறு செய்பவள் என்ற பிழையான முடிவு முற்காலத்தவரால் செய்யப்பட்டுள்ளது. இக்கருத்துக்கள் பெரும்பாலும் ஆண்களாலேயே கூறப்பட்டுள்ளன. எனவே ஏன் இக்கருத்துக்கள் கூறப்பட்டன என எண்ணிப் பார்பபதும் இன்று ஒரு தேவையாகவுள்ளது.

## பெண் இழிநிலை பெறக் காரணம்

பெண்ணின் இழிதகைமை பற்றிப் பேசுவதற்கு முக்கிய காரணியாக அமைந்தது ஆரியப் பண்பாடாகும், ஆரியப் பண்பாட்டில் ஆணே முதன்மையானவன் எனப் போற்றப்பட்டான். மனுதர்ம சாஸ்திரப் பெண் எப்போதும் ஆணால் பாதுகாக்கப்பட வேண்டியவளென்றும் தனித்தியங்க முடியாதவளென்றும் வகுத்துக் கூறி உள்ளது. இதனையே நம்மவரும் கண்மூடிக் கொண்டு பின்பற்றியுள்ளனர். பெரும்பாலும் பெண்ணைப் பற்றிய இழிவான கருத்துக்கள் ஆண்களாலேயே கூறப்பட்டுள்ளன.

> **பிற்காலத்திலே பெண்ணைப் பற்றிய மரபான கருத்துக்களை மாற்றிக்கூறப் புகுந்த பாரதி போன்றவர்களும் முரண்பட்டு நிற்கின்றனர். புதுமைப்பெண் பற்றிப் புரட்சிக் கவிதை பாடிய பாரதியே தனது பாஞ்சாலி சபதத்தில் 'பெட்டைப்புலம்பல்' என்று பாடியுள்ளான்.**

பெண்ணின் குண இயல்புகளையும் ஆற்றல்களையும் சரிவரப்புரிந்து கொள்ளாமல் பெண்ணைப் பற்றிய கருத்துக்களைப் பலர் கூறப்புகுந்துள்ளனர். எடுத்துக்காட்டாக பழைய இலக்கியப் பாடல்களுக்கு உரை செய்தோர் பலர் முரண்பட்ட கருத்துக்களைக் கூறிச் சென்றுள்ளனர். சிறப்பான குணங்கள் யாவும் ஆண்களுக்கே உரியனவை, முரண்பட்ட குணங்கள் பெண்களுக்கே உரியன என்ற கோட்பாட்டை அவர்கள் விட்டுச் சென்றுள்ளனர்,

இயற்கை நிலையிலே பெண் தனக்கெனச் சில பேராற்றல்களைப் பெற்றிருக்கிறாள். குழந்

தைகளைப் பெற்று வளர்த்து ஆளாக்குகின்ற பொறுப்பை ஏற்றிருக்கிறாள். அதனால் அவளிடம் தலைமைத்துவம் இயற்கையாகவே அமைந்துள்ளது. அந்தத் தலைமைத்துவம் வீட்டிற்கு வெளியே நாட்டிற்கும் பயன்படுமானால் அதன் பயன் பெரிதாகும். ஆணுக்கு விஞ்சி அவர் தலைமைத்துவம் செயற்படும் நிலையும் உருவாகும். இதனை விரும்பாத ஆண்கள் 'மரபு' என்ற போர்வையைப் பெண்ணுக்குப் போர்த்தி அவள் ஆற்றல்களையெல்லாம் வீட்டோடு முடங்க வைத்துவிட எண்ணினர். பெண்ணின் செயற்பாடுகளும் பொறுப்பாள்கையும் வீட்டு நிலையிலே ஏற்றுக்கொள்ளப்பட்டாலும் நாட்டு நிலையில் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. பரந்த அடிப்படையிலேயே பெண்களுடைய தலைமைத்துவம் செயற்படவேண்டும் என்று எண்ணமும் அக்காலத்தில் ஆண்களுக்கு இருக்கவில்லை. எனவே தற்போது புதிய மரபு தன்னைத் தோற்றுவிக்க வேண்டியதும் இன்றியமையாததாகவுள்ளது. இலலாள், மனைவி என்ற சொற்கள் வீட்டில் மட்டுமே பெண்ணின் தலைமைத்துவத்தை எடுத்துக் காட்டுவதாய் அமைகின்றன.

பழைய மரபுகளின் போலித் திரையைக் கிழித்தெறியின் பெண்களின் உண்மையான ஆற்றல்கள் வெளிப்படும். அப்போது தான் பெண்களின் இழிநகைமைகளையும் அகற்ற முடியும்.

பெண்களுக்குத் தேவையான கல்வியூட்டலைச் செய்தால் இந்தப் போலிமரபுப் போர்வையைக் கிழித்துவிட்டு அவர்கள் வெளியேவர முடியும். தமிழர் பண்பாட்டில் பெண் தெய்வமாகப் போற்றப்பட்ட நிலை இன்று மறந்துவிட்டபண்பாடாகிவிட்டது. தாய்வழி மரபு பேணும் முறை மாறித் தந்தை வழி மரபு பேணும் நிலைமை தமிழர் பண்பாட்டிலே இன்று இடம் பெற்றுவிட்டதாலும் பெண்களை இழிவு செய்யும் மரபு அழிக்கமுடியாததாயிற்று. பெண் கல்வி பெற்று தன்னுடைய நிலையைத் தானே நன்குணர முற்பட்டால் இலக்கியங்களில் இழித்துப் பேசும் நிலையும் அறவே ஒழியும். பெண்களின் உண்மையான குண இயல்புகளை யாவரும் அறியப் பெண்களே இலக்கியங்களைப் படைக்கவும் முடியும். அதுவே சமூக மாற்றத்தையும் ஏற்படுத்த வல்லது என்பதில் ஐயமில்லை.

---

சிறுமை பல செய்து சீரழிக்கும் - பொய்மை
பீடைக்குள் வீழ்த்தி துடிக்கவைக்கும்
வறுமையிலுமிது துயர் கொடுக்கும் - சீதனப்
பேயை விரட்டி அழித்திடுவோம்

– வளவை வளவன்

---

# பாக்கியம் மாமியும் பரமேசுவரியும்



பாக். மாமி:- என்ன சரசு இந்த நேரத்திலை ஊரு லாத்த வெளிக்கிட்டிட்டாய்... வீட்டிலை சமையல் சாப்பாடு ஒண்டுமில்லையே......

பரமேசு: ஏனில்லை...எல்லா அலுவலும் நடக்குது...... நானொருக்கா சின்னத்தம்பி மாமான்ரை பெடியனைப் பாக்கவெண்டு போறன்......

பாக். மாமி:- ஆர் வீட்டிலை சமைக்கிறது... மனிசனே...

பரமேசு:- இல்லை மாமி ..சின்னவள் வீட்டிலை நிக்கிறாள் சமைப்பாள்...

பாக். மாமி:- ஏனடியாத்தை......பெடிச்சி படிக்கப் போறேல்லையே...

பரமேசு:- படிப்பாலை மறிச்சுப் போட்டனணை... படிச்சு என்ன பிரயோசனம்... படிப்புக்கூடக் கூட சீதனத்திலையும் கூடக்கேக்கிறாங்கள்... பாத்திட்டு மறிச்சாச்சு...

பாக். மாமி:- விசரி விசரி... நீ பெத்த பிள்ளையின்ரை வாழ்க்கைக்கு நீயே மண் அள்ளிப் போடுறியே... பாவி...

பரமேசு:- என்னத்துக்கெணை இப்ப என்னைத் திட்டுறாய்...

பாக். மாமி:- பொம்பிளைப் பிள்ளையள் எண்டவுடனை ஆக கலியாணத்தையும் சீதனத்தையும் தான் நினைக்கிறியள்...

பரமேசு:- அப்ப வேறை என்னத்தை நினைக்கச் சொல்லுறாய்...

பாக். மாமி:- ஒரு வேள்விக்கு கிடாய் வளத்தமாதிரி பொம்பிளப் பிள்ளையளை வளத்த காலமில்லை இது... விளங்குதோ... இண்டைக்கு எங்கடை நாட்டிலை பொம்பிளப் பிள்ளையள் செய்யிற சாதனையளை வெள்ளைக்காறங்கள் பாத்து மூக்கிலை விரல் வைக்கிறாங்கள்... பொம்பிளை எண்டால் முந்தி கண்ணகியும், சீதையும் தான் ஞாபகம் வாறது. இண்

டைக்கு அங்கயற்கண்ணியும்... நளாயினியும் சாந்தாவும்... எண்டுதான் நினைப்பு வருது. அந்தளவுக்கு எங்கடை இனம் விழிப்படைஞ்சிட்டுது...

பரமேசு:- ஒண்டுரண்டு பேர் அதுக்கெண்டு பிறந்ததுகள் செய்யுதுகள்... எங்கடை பிள்ளையளாலை ஏலுமே?...

பாக். மாமி:- அதுகளும் உங்கட பிள்ளையள் மாதிரிப் பிறந்து வளந்ததுகள்தான்... ஆனா... அதுகள் நல்லா யோசிச்சு... வைராக்கியமா தங்களை உருவாக்கிச்சுதுகள்... நீ உன்ர பெடிச்சியை படிக்கவும் விடாம சிந்திக்கவும் விடாமல் செய்யுறாய்...

பரமேசு:- படிக்கிறன் எண்டு சொல்லி... அவள் கூட்டமெண்டும்... கூத்தெண்டு மெல்லே திரியுறாள்... பாத்திட்டு "வீட்டில்இரு" எண்டு மறிச்சுப் போட்டன்..

பாக். மாமி:- ஏன்...ஏன்...உன்ரை நடுவிலான் விடிஞ்சாப்பொழுதுபட்டா மதகிலையும்... சந்தியிலையும்...... வம்பளக்கிறான்...... அவனை வீட்டிலை மறிபாப்பம்...

பரமேசு:- அவன் ஆம்பிளைப்பிள்ளையெல்லேயணை...

பாக். மாமி:- உதுதானே நீங்கள் விடுறபிழை...பிள்ளையள் எல்லாம் ஒண்டுதான் ஆம்பிளைப் பிள்ளையை ஒரு மாதிரியும் பொம்பிளப் பிள்ளையை ஒரு மாதிரியும் நினைச்சு வளக்கப்பிடாது...

---

☐ *ஆணும் பெண்ணும் ஒத்திசைவாக ஒருவர் ஒருவரின் சுதந்திரத்தையும் - சமத்துவத்தையும் - கௌரவத்தையும் மதித்து குடும்ப வாழ்வின் பொறுப்புகளைப் பகிர்ந்து சமூகத்தின் மேம்பாட்டிற்கு உழைத்து, பரஸ்பர புரிந்துணர்வுடன் பற்றுக்கொண்டு வாழ்ந்தால், இந்தப் பால் வேறுபாட்டால் எழும் பல்வேறு முரண்பாடுகள் நீங்கும்.*

**தமிழீழத் தேசியத் தலைவர்**

---

# பெண்ணுக்கு எதிரி?

– வன்னி உமா

எமது சட்டமும் பண்பாடும் ஒரு ஆணும், பெண்ணும் சேர்ந்து வாழ்வதையே ஏற்றுக்கொள்வதுடன் வலியுறுத்துவதாயும் உள்ளன. ஆனால் இன்று நடப்பது என்ன? பெரும்பாலான குடும்பங்கள் இடம் பெயர்ந்து ஒரே வீட்டில் வாழும் இன்றைய சூழ்நிலையில் பெண்கள் தம்மைத்தாமே பாதுகாத்து தமது சுயகௌரவத்தையும் பேண வேண்டியது தலையாய கடமையாகும். ஆண்களைத் தமது வாழ்க்கைத் துணையாகத் தேர்ந்தெடுப்பதில் பெண்கள் மத்தியில் தம்மையறியாமலே ஒரு போட்டி மனப்பான்மை உருவாகிவருவதையும் ஆண்களின் குணநலனை ஆராயாமலே திருமணம் புரிவதும் இன்று கண்கூடாகக் காணக்கூடியதாக உள்ளது.

ஒரு திருமணமான ஆணை (அவர் திருமணமாகி மனைவி, குழந்தைகளுடன் வாழ்கிறார் என்பது தெரிந்தும்) விரும்பும் பெண்களும் அவருடன் முறையற்ற உறவை வைத்துக் கொள்ளும் பெண்களும், இன்றும் எம்மத்தியில் உள்ளனர் என்பதை வேதனையுடன் எழுதுகின்றோம். இப்படியான பெண்கள் தாமும் கெட்டு, சமூகத்தையும் கெடுப்பதுடன் இன்னொரு பெண்ணின் வாழ்வையும் கெடுப்பதை உணரவில்லையா? அல்லது உணரவிரும்பவில்லையா? எமக்கு வரும் பெண்கள் தொடர்பான பிணக்குகளில் அநேகமானவை ''மனைவி இருக்கும் பொழுதே இன்னொரு பெண்ணுடன் தொடர்பு'' எனச் செய்யப்பட்ட முறைப்பாடுகளும், காதலித்தவளைக் கைவிட்டு பணத்துக்காக இன்னொரு பெண்ணைத் திருமணம் செய்தமை என்ற முறைப்பாடுகளுமே ஆகும்.

இது தொடர்பாய் எம்மிடம் வந்த முறைப்பாடுகளில் இரண்டை இங்கே தருகின்றோம்.

நூலகம்
மாநகர சபை
யாழ்ப்பாணம்

01. திருமணமாகி இரண்டு வருடங்கள் முடிந்து விட்டன. கணவர் வசதியானவர், மனைவி பாடசாலை ஆசிரியை, அமைதியாக நடந்த குடும்ப வாழ்வில் இடையில் ஒரு புயல், எதிர் வீட்டுப் பெண்ணால் ஏற்படுகின்றது. ''அக்கா'' ''அண்ணா'' என்று உறவு கொண்டாடிப் பழகியவர் ''அண்ணா'' என்ற பதத்தின் அர்த்தம் தெரியாமல் அந்த ஆணிடமே பாலியல் தொடர்பு கொண்டுள்ளார். இதை அறிந்த மனைவி சும்மாயிருப்பாளா? கணவனிடம் கேட்டாள். அவளின் கேள்விக்குக் கிடைத்தபதில் அடி, உதை, கூடவே வாய்க்காரி என்ற பட்டமும் கட்டி பிறந்த வீட்டுக்கு விரட்டப் பட்டதுதான். இவளின் இந்த வேதனைக்கும் பிரிவுக்கும் காரணம் யார்?

02. இரண்டு வருடங்களாகக் காதலித்து, திருமணம் செய்வேன் என நம்பிக்கை யூட்டி, காதலியுடன் பாலியல் உறவையும் வளர்த்துக் கொண்டபின்பு, பணமில்லை என்பதால் அவளைக் கைவிட்டு விட்டு பணத்துக்காக இன்னொரு பெண்ணைத் திருமணம் செய்ய எண்ணியவரை (அவர் காதலித்ததும், கைவிடப்பட்டதும் தெரிந்தபின்பும்) திருமணம் செய்வதற்கு தயாராயுள்ள பெண்ணின் மனநிலை பற்றிச் சற்றே சிந்தியுங்கள். தனக்கு வரப் போகும் கணவர் தனது அயல் வீட்டுப் பெண்ணுடன் கொண்டிருந்த உறவு எல்லாம் தெரிந்தும் கூட ஒரு பெண் அவனுடன் வாழச் சம்மதிக்கிறாள் என்றால் ஆணைத் தெரிவு செய்வதில் உள்ள போட்டியா? இது பெண்ணையே இழிவு படுத்தும் செயல் என்பதை இப்பெண் உணரவில்லையா?

இங்கே இந்த இரண்டுவிடயங்களையும் சிந்தித்துப் பாருங்கள். பெண் அல்லவா பெண்ணுக்கு எதிரியாகிறாள்? பெண்களே! நாங்கள் உங்களிடம் கேட்பதை நீங்களே உங்களிடம் கேளுங்கள்.

ஒரு பெண்ணுக்குத் துரோகம் செய்தவன் நாளைக்கு உங்களுக்கும் செய்யமாட்டான் என்பதற்கு என்ன உத்

தரவாதம்? பகிரங்கமாகச் செய்த திருமண உறவையே மதியாத ஒருவன், மறைமுகமாகக் கொண்ட உங்கள் உறவை எப்படி மதிக்கப் போகிறான்?

ஒரு பெண்ணின் உணர்வலைகளின் கொந்தளிப்பில் படகோட்ட நினைக்கும் நீங்கள் குறித்த கரையை அடையாமலே படகு கவிழ்ந்து விட்டால் என்ன செய்வீர்கள்?

இரண்டாவது பெண்ணாகிய உங்களைப் போன்று மூன்றாவது பெண் உங்கள் வாழ்வில் புகுந்தால் உங்கள் நிலை?

சகோதரிகளே! உங்கள் வாழ்க்கைத்துணையைத் தேர்ந்தெடுப்பதில் மிகவும் அவதானமாயிருங்கள். குடும்பஸ்தர்களையோ காதலியை கைவிட்டவர்களையோ தவறியும் உங்கள் துணையாக வரித்துக் கொள்ளாதீர்கள்.

"இவர்கள் மின்மினிப்பூச்சிகள், நீங்கள் நினைக்கும் சூரியர்களல்ல." ஏமாந்துவிடாமல் விழிப்புடன் இருங்கள். அடுத்து எமது சட்டங்களையும் சற்றே அறிந்து வைத்திருங்கள்.


# பி. ஐ. பர்னான்டோ

## மூக்குக் கண்ணாடியகம்

பல்கட்டும் நிலையம்
524, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

உலகை உலுக்கிய 2ஆம் உலகப்போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட 50வது ஆண்டு நிறைவு விழாக்கள் உலகெங்கும் கொண்டாடப்பட்டு வரும் இவ்வேளை 2ஆம் உலகப் போரின் போது தாம் விரும்பாமலே மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டுத், தற்போது வாழ்வின் இருண்ட பக்கங்களில் இருக்கும், ''உல்லாசப் பெண்கள்'' என அழைக்கப்பட்ட முன்னாள் பாலியல் அடிமைகளுக்கு நீதி வழங்கப்படுமா?

# உல்லாசப் பெண்கள்: தொடரும் கதை

- ஒவியா

**1930**களிலிருந்து 2ஆம் உலகப்போர் முடிவுவரை ஜப்பானிய அரசு தனது இராணுவ அதிகாரிகளின் ஆலோசனைப்படி சிப்பாய்களுக்கு பாலியல் சேவைகளை வழங்கவென இளம் பெண்கள் பலரைக் கடத்திச் சென்று இராணுவ விபச்சார விடுதிகளை ஸ்தாபித்தது. இவ்விடுதிகள் ''உல்லாச நிலையங்கள்'' என அழைக்கப்பட்டன.

ஆரம்பத்தில் இவ்வாறான நிலையங்களுக்கு ஏற்கெனவே விபச்சாரத்தில் ஈடுபட்டிருந்த ஜப்பானியப்பெண்களே பயன்படுத்தப்பட்டனர். ஆனால் ஜப்பானிய அரசின் கடுமையான சட்ட திட்டங்களினாலும், ஏற்கெனவே விபச்சாரிகளான இப்பெண்கள் பாலியல் நோய்களின் ஆரம்பக்கட்டத்தில் இருந்ததாலும் இந் நடவடிக்கை பின்னர் கைவிடப்பட்டதாக ஜப்பானிய

வரலாற்றுப் பேராசிரியர் ஒருவரின் ஆவணங்களிலிருந்து தெரிய வந்ததாக சர்வதேச நியாயவாதிகள் சபையின் அறிக்கை குறிப்பிடுகிறது. எனவே ஜப்பானிய அரசு ஆசிய பசுபிக் பிராந்தியம் முழுவதிலும் இருந்து சுமார் 2,00,000 இற்கும் மேற்பட்ட இளம் பெண்களை இவ் அடிமைத் தொழிலுக்கெனப் பலவந்தமாகச் சேர்த்தது. இப்பெண்களில் பெரும்பாலானோர் கொரியப் பெண்களாசவும், ஏனையோர் பிலிப்பைன்ஸ், சீனா, இந்தோனேசியா, பர்மிய, டச்சுப் பெண்களாவர். ஜப்பானின் காலனித்துவ ஆட்சி இதற்குச் சாதகமாக அமைந்திருந்தது. காலப்போக்கில் ஜப்பானியப் படைவீரர்கள் ஆசிய பசுபிக் பிராந்தியததில் எங்கெங்கு நிலை கொண்டிருந்தனரோ அங்கெல்லாம் இவ் இராணுவ விபச்சார விடுதிகள் மிக விரைவாக விஸ்தரிக்கப்பட்டன.

மேற்படி தகவல்களை ஜெனிவாவைத் தளமாகக் கொண்ட சர்வதேச நியாயவாதிகள் ஆணைக்குழு (I C J) வெளிக்கொண்டுவந்துள்ளது. மேற்படி குழு நீதிபதிகள், சட்டத்தரணிகள் சட்டவல்லுநர்சள் ஆகியோரைக் கொண்ட ஒரு சர்வதேச அமைப்பாகும். இவ்வமைப்பின் உறுப்பினர்களான பம்பாய் உயர்நீதி மன்ற வழக்கறிஞரான திருமதி செனகல் பரண்ஜியும், தெற்கு அவுஸ்திரேலியாவில் சட்டவிரிவுரையாளராக இருக்கும் திருமதி உஸ்ரினியா டொல்கொபோல் என்பவரும் இந்நடவடிக்கையின் போது பாதிக்கப்பட்ட பலபெண்களை பிராந்திய மகாநாட்டில் நேரடியாகச் செவ்வி கண்டனர். இப்பெண்களில் 40க்கும் மேற்பட்டவர்கள் கடுமையான எலும்பு முறிவுகளினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ் ஆணைக்குழு பல ஜப்பானிய அதிகாரிகள், 3 முன்னாள் படைவீரர்கள் ஆகியோரின் பேட்டிகள் அடங்கிய தனது 1993ஆம் ஆண்டு அறிக்கையை மக்கள் முன் வெளியிட்டது.

> **பாதிக்கப்பட்ட பல பெண்களில் ஜெற்றுாட் பாலிசாலிசா என்ற பிலிப்பைன்ஸ் பெண்ணும் ஒருத்தி. 1944ம் ஆண்டு தனது 21 வயதில் சட்டக் கல்லூரியின் 3ம் ஆண்டுக் கல்வியைப் பூர்த்தி செய்திருந்த வேளை பலாத்காரமாகக் கடத்திச் செல்லப்பட்டாள்.**

அப்போது அவளுக்குத் திருமணமாகி 2 பெண் குழந்தைகளும் இருந்தனர். 14 மாதங்களாகத் தொடர்ந்து உல்லாச நிலையத்தில் சிறை வைக்கப்பட்டிருந்த பாலிசாலிசா பின்வருமாறு கூறுகிறார். "முதற் தடவை, தான்

கட்டளையிடும் அதிகாரிக்கு சாத்வீகமான முறையில் எதிர்ப்புத் தெரிவிக்கவே ஆக்திரமுற்ற அதிகாரி தோலினால் சுற்றப்பட்ட இரும்புக்கம்பி ஒன்றினால் எனது காலில் பலமாகத் தாக்கினான். சகிக்கமுடியாத, கொடுமையான அந்த அடியின் பின் என்னால் எப்போதுமே நடக்கமுடியவில்லை. அந்த வேதனையின் போதும் அவன் என்மீது பாலியல் வன்முறையைப் பிரயோகித்தான்''.

போரின் பின்பு பாலிசாலிசா தனது குடும்பத்தினருடன் திரும்பவும் இணைந்த போதும், அதன் பின்பு அவளது கணவன் தனது இரு பெண்குழந்தைகளையும் தன்னுடன் அழைத்துக்கொண்டு பாலிசாலிசாவைத் தனியாக விட்டுச்சென்று விட்டான். இன்று வரை பிரத்தியேகமாக ரியூசன் சொல்லிக்கொடுப்பதன் மூலம் தனது வாழ்க்கையை மீளவும் கட்டியெழுப்ப முயற்சிக்கும் இப்பெண் தனது பிள்ளைகளை இதுவரை திரும்பவும் பார்க்கவேயில்லை. தற்போது 72 வயதுடைய பாலிசாலிசா தனக்கு ஏற்பட்ட உடற்காயங்களைவிட தனது ஆத்மா, மனம் ஆகியவற்றுக்கு ஏற்பட்ட பாதிப்புக்களே சொல்லொணாதவை என்கிறார்.

1942 ஆம் ஆண்டு அவளது 18வது வயதில் உலலாச நிலையத்திற்குக் கட்டாயப்படுத்திக் கொண்டு செல்லப்பட்ட முன் - ஒக் ஜீ என்ற கொரியப் பெண் போரின் முடிவில் அவளது சொந்த இடத்திற்குத் திருப்பியனுப்பப்பட்டாள். போர்க்காலத்தில் தான் செய்த தொழிலை மறைத்ததனால், பழமைபேணும் கொரியக் கிராமத்திற்குள் மீண்டும் உட்செல்ல அனுமதிக்கப்பட்டாள். ஆனால் அவளுக்கு ஏற்பட்ட பாலியல் நோய் காரணமாக அவளது கருப்பையின் பலோப்பியன் குழாய்கள் அகற்றப்பட்டதனாலும், அபரிமிதமாக அடக்கப்பட்ட வெட்கத்தினாலும் அவள் திருமணம் முடிக்கவேயில்லை.

இன்னுமொரு கொரியப் பெண்ணான கிம் - பொக் - சுன் என்பவள் தனது கிராமததிலிருந்து 2 ஜப்பானியஇராணுவ பொலிஸ்இனாலும், இராணுவ உடையிலிருந்த கொரிய ஆண் ஒருவனாலும் 1944 ஆம் ஆண்டு ரங்கூனிலிருந்த இராணுவ விபச்சார விடுதிக்கு இழுத்துச் செல்லப்பட்டாள். பர்மியக்காடுகளில் கைவிடப்பட்ட இவள் இன்னுமொரு பெண்ணுடன் இந்தியாவை அடையும வரை பர்மாக் காடுகளூடாக நடந்திருக்கிறாள். தனது சொந்த இடமான கொரியாவை அடைய அவள் 5 மாதங்களைச் செலவிட்டாள். ஆனால் இதுவரை அவள் தனது குடும்பத்தாரைச் சந்திக்க முடியவில்லை. அன்றி

லிருந்து கடந்த 34 வருடங்களாக ஒரு சப்பாட்டுக்கடையை நடாத்தியவாறு தனியாகவே வாழ்ந்து வருகிறாள். இவ்விபச்சார விடுதிகளில் காணப்பட்ட வாழ்க்கை நிபந்தனைகள் அப் பெண்களுக்கு எல்லையற்ற துன்பத்தைத் தருவதாக இருந்துள்ளது என சர்வதேச நியாயவாதிகள் ஆணைக்குழு (ICJ) அறிக்கை கூறுகிறது. 3,X5' சதுரத்துக்குள் அடைக்கப்பட்டிருந்த இப் பெண்களை இரவும் பகலும் பலாத்காரப்படுத்த நீண்ட வரிசையில் சிப்பாய்கள் காத்திருந்துள்ளனர். உயிர் வாழ்வதற்கு மட்டுமே போதுமான உணவும் நீரும் வழங்கப்பட்டன. மருத்துவ உதவி குறைவாகவோ அல்லது இல்லாமலோ இருந்த அதே வேளை, பாலியல் நோய்களைப் பரிசோதிப்பதற்கான மருத்துவ உதவி மட்டுமே வழமையாகக் கிடைக்கத்தக்க தாயிருந்தது. அங்கிருந்து பெண்கள் தப்பிச் செல்ல முடியாதவாறு பலத்த காவல் இடப்பட்டிருந்தனர். அதற்கு மேலாக ஜப்பானிய சிப்பாய்கள் தொடர்ந்தும் தாம் பாலியல் திருப்தி அடைவதை உறுதி செய்வதற்காக அப்பெண்களை அடித்தும் காயப்படுத்தியும் பலவிதமான சித்திரவதைகளைச் செய்தனர்.

ரங்கூனில் அமைந்திருந்த உல்லாச நிலையம் கடுமையான சட்ட திட்டங்களுக்குள்ளாக்கப்பட்டிருந்தது. அங்கே தனிப்பட்ட படையினருக்காக காலை 9மணி தொடக்கம் பிற்பகல் 3 மணி வரையும், கீழ் நிலை அதிகாரிக்காக பிற்பகல் 3மணி தொடக்கம் இரவு 7மணிவரையும் உயர் அதிகாரிகளுக்காக இரவு 9மணியிலிருந்து அடுத்த நாள் காலை வரையும் தனித்தனியாக நேரங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன. அந்தப் பிரதேசம் ஒருமுறை கடுமையான குண்டுவீச்சுக்கு இலக்காகிய பின்பு அச் சிப்பாய்கள் தந்திரமாக வேறு இடத்திற்கு மாறிமாறி அங்கு கூட கடும் மழையின் மத்தியிலும் பாலியல் ரீதியாகத் தம்மைத் திருப்திப்படுத்துமாறு அப் பெண்களை வற்புறுத்தினர்.

இராணுவ விபச்சார விடுதிகளுக்கு இழுத்துச்செல்லப்பட்ட பல பெண்கள் முதல் நாள் முடிவின்போது கடும் இரத்தப் போக்குக்கு உள்ளாகியிருந்த போதும் ஜப்பானிய இராணுவத்தினரால் தொடர்ந்து பாலியல் பலாத்காரத்திற் தள்ளாக்கப்பட்டனர். என (ICJ) அறிக்கை கூறுகிறது. இன்னுமொரு பெண் கடுமையாகத் தாக்கப்பட்டதன் மூலம் 2 விலா எலும்புகள் இடம் பெயர்ந்ததால் ஏற்பட்ட வேதனை காரணமாக துவண்ட போது கூட அவள் பாலியல் ரீதியாகத் துன்புறுத்தப்பட்டுள்ளாள்.

இத்துயரம் போரின் முடிவுடன் மட்டும் நின்று விடவில்லை. ஜப்பானியச் சிப்பாய்கள் இந்தப் பெண்களை பெரியளவில் கொலையும் செய்தனர். அத்துடன் சில பெண்கள் இருந்த இருப்பிடங்கள் குண்டுவீச்சுக்கு இலக்காகிய போது கொல்லப்பட்டனர். சில பெண்கள் போரின் போது போர் முனையில் கேடயமாகப் பயன்படுத்தப்பட்டனர். தப்பியோடிய சிப்பாய்களால், பல பெண்கள் கைவிடப்பட்டதுடன் காடுகளில் பட்டினியால் இறந்து போகக் கூடியளவுக்கு அல்லது எந்த வழியிலாவது தமது வீடுகளை அடையம் வண்ணம் கைவிடப்பட்டனர். மீளவும் தமது வீடுகளுக்குத்திரும்பாத பெண்களின எண்ணிக்கை பற்றி எவருக்குமே தெரியாது என ICJ அறிக்கை கூறுகிறது. போரின் பின்பு தங்களது சொந்தநாட்டுக்குத் திரும்பிச் சென்ற பெரும் எண்ணிககையான பெண்கள் தங்களது குடும்பத்தினரை மீளவும் சந்திக்கவேயில்லை. அவர்களுக்கு பொது ஸ்தாபனங்கள் புகலிடம் அளித்துள்ளன தமது வீடுகளுக்குத் திரும்பிய பெண்களில் பலர் குற்றவுணர்வு, வெட்க உணர்ச்சி போன்றவற்றைத் தொலைத்தவர்களாகக் காணப்பட்டனர். பலருக்கு பாலியல் நோய்கள் காணபபடடன. சமூகத்தின் ஆழமான ஒழுங்காற்று நடவடிக்கைகளுக்குள் தள்ளப்பட்டனர். சமூகம் பல பெண்கள் மீது அநுதாபம் தெரிவிக்கவோ அவர்களை விளங்கிக்கொள்ளவோ முன்வரவில்லை.

இவர்களில் திருமணம் செய்த பெண்களில் பலர் தாய்மை அடைய முடியவில்லை. மற்றவர்கள் ஆண்கள் மீதும், பாலியல் மீதும் வெறுப்படைந்தவர்களாகக் காணப்பட்டனர். காட்டுமிராண்டித்தனம் வழங்கிய பின் விளைவுகளால் கடந்த நான்கு தசாப்தங்களுக்கும் மேலாக இப்பெண்கள் அமைதியாக வருந்திக் கொண்டிருக்கின்றனர்.

கேவலமான இக்கதையின் வருந்தத் தக்க அம்சம் என்னவெனில் போரில் வெற்றி பெற்ற நேசநாட்டுப் படைகள் இந்நிலையங்களைபற்றிய பரந்தளவிலான ஆதாரங்களை போரின் முடிவின் பின்பு உடனடியாகச் சேகரித்தன. ஆசிய, பசுபிக் பிராந்தியம் முழுவதும் நிறுவப்பட்ட நிலையங்களை அவர்கள் அறிந்திருந்தனர். எனினும், 1946 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட தூரகிழக்கு நாடுகளுக்கான சர்வதேச இராணுவ நியாயசபை இப்பெண்கள் மீது இழைக்கப்பட்ட குற்றங்களுக்கெதிராக விசாரணை எதுவும் மேற்கொள்ளவில்லை. இந்நடவடிக்கையானது அப்பெண்களின் முகத்தில் அறைந்தது போலவே இருந்தது என செனகல் பரண்ஜி குறிப்பிடுகின்றார்.

இன்னொரு அம்சம் என்ன வென்றால் இவ்வாறு பாதிக்கப் பட்ட 'டச்சுப்பெண்கள்' பற்றி இந்தோனேசியாவில் நடத்தப் பட்ட 'பற்றாவியா' விசார ணைக் குழுவில் விவாதிக்கப் பட்டு பல ஜப்பானிய சிப்பாய் கள் தண்டனைக்குரியவர்களாக் கப்பட்ட போதும், உள்ளூர் இந்தோனேசியப் பெண்களுட்பட ஏனைய நாடுகளைச் சேர்ந்த அதே விதமாகப் பாதிக்கப்பட்ட பெண்கள் இவ் விசாரணை யில் அலட்சியம் செய்யப்பட்ட னர்.

தென்கொரியாவின் மகளிர் அமைப்புக்கள் உடனடியாக விசாரணையை மேற்கொள்ளு மாறு கோரின. அதற்கு ஜப் பானிய அரசு இவ்வாறான நட வடிக்கைகளில் அரசோ, இரா ணுவமோ சம்பந்தப்படவில்லை எனவும் தனியட்ட ஸ்தாப னங்களே இதில் ஈடுபட்டதாக வும், அத்துடன் இத்தொழி லில் ஈடுபடுத்தப்பட்ட பெண் கள் தாமாகவே வந்து சேர்ந் தவர்கள் என்றும் கூறியது.

அதேவேளை யுத்த புல னாய்வு அதிகாரியான வொன் லாய் - சான் என்பவர் எழுதிய "பர்மா: சொல்லப்படாத கதை" என்ற நூலில் பின்வருமாறு கூறுகிற ர்.

> "எத்தனை அதிர்ஷ்டமற்ற இளம் பெண்கள் இவ்வாறு ஜப்பானிய அரசால் 2ஆம்உல கப்போரின் போது கட்டாயப் படுத்தப்பட்டு விபச்சாரத்திற் குள்ளாக்கப்பட்டார்கள் என் பது எவருக்குமேதெரியாது"

71 வயதான கிகுய்சி:புக்கு யாமா என்ற ஜப்பானிய இரா ணுவ போர்விமானி 'ICJ இற்கு கொடுத்த பேட்டியின் போது 'சிப்பாய்கள் தங்களைச் சுற்றி எப்போதுமே பெண்களைக் கொண்டிருக்காததால், அவர் கள் பெண்களிடம் மிருகமாகவே நடந்துள்ளனர்" என குறிப் பிடுகிறார். கொரியாவில் 1980 ஆம் ஆண்டு கொரியப் பேரா சிரியர் ஒருவரால் மேற்கொள் ளப்பட்ட "சிறுவர் விபச்சார மும் ஜப்பானிய உல்லாசப் பயணிகளும்" என்ற ஆய் வின் போது அவர் பல முன் னாள் பாலியல் அடிமைகளைச் சந்தித்தார். அவர் இந்நிகழ்வு கள் புதியவையல்ல என்று கூறிய துடன், அது சம்பந்தமாக ஜப் பானியச் சிப்பாய்களினால் எழு தப்பட்ட, போர்க்கால இரா ணுவ விபச்சார விடுதிகளுடன் ஜப்பானிய அரசு சம்பந்தப் பட்ட விபரங்கள் அடங்கிய புத்தகங்களைக் காண்பித்தார். உதாரணமாக தேசிய தொழி லாளர் சேவை அமைப்பின் அதி காரியான சேஜி ஜோஷிடா என் பவர் எழுதிய 'My War Crimes: The Forced Draft of Koreans" என்ற நூலில் அவர் தான் பல ஆயிரம் பெண்களை இவ்வாறான தொழிலுக்குத் திரட்டியதாக ஒப்புக் கொண் டுள்ளமை குறிப்பிடத்தக்கது

1990இல் கொரிய பெண்கள் அமைப்பு ஜப்பானிய அரசை மன்னிப்புக் கோரும்படி பகி

ரங்க கடிதம் அனுப்பியது. அதே ஆண்டு நவம்பர் மாதம் பாலியல் அடிமைத் தனத்தால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கான கொரிய கவுன்சில் உருவாகியது. 1991 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இதற்கான ஆதாரங்கள் இல்லையாதலால், மன்னிப்புக்கான இடமேயில்லை என ஜப்பானிய அரசு பதிலளித்தது. இதன்பின்பு ஒரு கொரிய பெண் தான் பாதிக்கப்பட்டது பற்றியும், பலவந்தமாகக் கடத்திச் செல்லப்பட்டது பற்றியும் பொது மக்கள் முன்னிலையில் தெரியப்படுத்தியதை அடுத்த ஜப்பானிய அரசு சம்பந்தப்பட்ட நடவடிக்கைகள் பத்திரிகைகளில் விமர்சிக்கப்பட்டன. 1992 பெப்ரவரி இந்த விடயம் UNHCR இல் முன்வைக்கப்பட்டது. அதே வருடம் ஆடி மாதம் பாதிக்கப்பட்ட பெண்களுக்கான பிலிப்பைன்ஸ் அமைப்பு உருவாகியது. அங்கு லோலா றோசா என்ற பிலிப்பைன்ஸ்பெண் பொது மக்கள் மத்தியில் இது பற்றி தனது அனுபவங்களை வெளியிட்டாள். அதன் பின்பு அடுத்தடுத்து இரு நாடுகளிலுமிருந்து பல பெண்கள் இது சம்பந்தமான தகவல்களைக் கூற முன்வந்தனர்.

அதன்பின்பு ஜப்பானிய பாராளுமன்ற செயலாளர் முதன் முதலாக, ஜப்பானிய இராணுவம் சிலவழிகளில் விபச்சார விடுதிகள் நடத்தியதில் சம்பந்தப்பட்டதென்றும் அதற்காக ஆழ்ந்த வருத்தத்தையும் தெரிவித்தார். 6 மாதங்களின் பின்பு

ஜப்பானிய அரசு பல அழுத்தங்களினால் இது சம்பந்தமான விசாரணைகளின் இடைக்கால முடிவுகளையும், இராணுவம் சம்பந்தப்பட்டிருந்தது என்பதை நிரூபிக்கும் 127 ஆவணங்களையும் வெளியிட்டது. தாமே முன்னின்று இராணுவ விபச்சார விடுதிகளை ஸ்தாபித்ததாகவும், குறிப்பிட்ட பெண்களின் விருப்பத்திற்கு மாறாகவே அவர்கள் விபச்சாரத்தில் ஈடுபடுத்தப்பட்டனர் எனவும் ஜப்பானிய அரசு 1993ம் ஆண்டு ஆவணி மாதம் ஒரு அறிக்கையை விட்டது.

அவ்வறிக்கையில் பெரியளவிலான பாதிப்புகள் அந்த பெண்களுக்கு இழைத்தமை பற்றியும் குறிப்பிட்டு, அதற்காக அவர்கள் எல்லோரிடமும் மன்னிப்பும் கோரியது.

ஆனால் இவ்வறிக்கையின் பின்பு ஜப்பானிய அரசு எதுவுமே செய்யவில்லை. போரினால் ஏற்பட்ட இழப்புக்களுக்கான நட்டஈட்டுத் தொகையை தீர்மானிக்கவென 1956 இலும்

1965 இலும் பிலிப்பைன்சுடனும் கொரியாவுடனும் ஏற்படுத்தப்பட்ட இருஉடன்படிக்கைகளுக்குப் பின்னால் அரசு மறைந்து கொண்டதாக பரண்ஜீ குறிப்பிடுகிறார். ஆனால் இப்பெண்கள் சம்பந்தப்பட்ட எந்தக் குறிப்புகளும் இடம் பெறாததுடன், அவர்கள் பற்றி யாருமே எண்ண வில்லை. அதே நேரம் போரினால் ஏற்பட்ட பாதிப்புகளுக்கான முழு நட்ட ஈட்டையும் இந்த உடன்படிக்கைகளுக்கூடாக வழங்கி விட்டதாகவும் தனக்கு இனி எந்தவிதப் பொறுப்புகளும் இல்லையெனவும் ஜப்பானிய அரசு கூறுகிறது.

இம்மாதிரியான குற்றச் செயல்கள் குறிப்பிட்ட சம்பவங்களுடன் மட்டும் முடிந்துவிடாது அவை வாழ்க்கை முழுவதும் தொடர்பவையாகவே உள்ளன என பாதிக்கப்பட்ட பெண்கள் நினைக்கிறார்கள். இப்பெண்கள் வெறுப்படைந்தவர்களாக இருப்பதுடன் தாம் சட்ட ரீதியான நட்டஈட்டுக்கு உரிமையுடையவர்கள் எனவும் எண்ணுகிறார்கள்.

கொரிய அரசு சிறிதளவு நட்டஈட்டை அறிவித்துள்ள அதே வேளை அந்நட்டஈட்டைப் பெற்றுக்கொள்ளும் பெண்கள் நாட்டின் முதிய பிரஜைகள் என்ற ரீதியில் தற்போது பெற்றுவரும் உதவியைத் தொடர்ந்து பெற முடியாது என்ற நிபந்தனையையும் விதித்துள்ளது. இந்நிபந்தனை அப்பெண்களால் ஏற்கப்பட முடியாததாகும். பிலிப்பைன்சில் இது சம்பந்தமான அரசின் கொடுப்பனவுகள் எதுவும் முன்வைக்கப்படவில்லை. ஜப்பானிய அரசு தனிப்பட்ட கம்பனிகளின் பங்களிப்புடன் இப்பெண்களுக்கு "தர்மப் பணம்" வழங்கவென ஒரு தனிப்பட்ட நிதியத்தை உருவாக்கத் திட்டமிட்டுள்ளது.

## வரலாற்றில் பெண்கள் பாடசாலைகள்

| | |
|---|---|
| இலங்கை | - 1824 |
| இந்தியா | - 1820 |
| சீனா | - 1844 |
| எகிப்து | - 1846 |
| துருக்கி | - 1863 |
| யப்பான் | - 1870 |
| ஈரான் | - 1874 |
| கொரியா | - 1886 |
| இந்தோனேசியா | - 1904 |

ஆதாரம் : Feminism & Nationalism in the Thind World.

ஆனால் இப்பெண்கள் இந்நிதிக் கெதிரான கருத்தையே தெரி விக்கின்றனர். வன்முறையாள னாக ஜப்பானிய அரசு இருந் ததை அவர்கள் நம்புகிறார் கள். எனவே அரசின் பங்க ளிப்பு சட்டரீதியான நட்ட ஈடாகவே இருக்க வேண்டுமென அவர்கள் எண்ணுகிறார்கள்.

1995 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் பாலியல் அடிமைத் தொழில் பற்றி 'UNHCR' கூட் டத்தில் கருத்திலெடுக்கப்பட்டது ''உல்லாசப் பெண்கள்: தொடர் கதை'' என்ற தலைப்பில் வெளி யிடப்பட்ட அறிக்கை பல திடுக் கிடும் தகவல்களை சொல்கிறது.

உண்மையில் ஜப்பானிய அரசு இவ்வாறான சட்டவிரோதமான பெண்களின் கடத்தல்களுக்கும் பாலியல் அடிமைத் தொழிலுக் கும் பொறுப்பாக இருப்பின், அவ்வரசு இதற்கான புனருத் தாரணம் சம்பந்தமாக என்ன நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதை ஆராய்வதே (I C J) இன் நோக்கம் என்று பரண்ஜி கூறுகிறார்.

ஜப்பான் இத்தகைய விபச்சார விடுதிகளை நடத்தியது பற்றியும் பராமரித்தது பற்றியும் தான் வைத்திருக்கும் முழு தகவல்களை யும் வெளிப்படுத்தவேண்டுமென (ICJ) அறிக்கை சிபார்சு செய் துள்ளது.

சர்வதேச குழுக்களினால் அழுத்தம் பெற்றாலொழிய ஜப் பானிய அரசு எந்தவித நட்ட ஈட்டையும் வழங்க விரும்ப வில்லை என(I C J) உணர்கிறது. நாம் நல்லதையே எதிர்பார்த் துக் கொண்டிருக்கிறோம் என பரண்ஜி குறிப்பிடுகிறார். உலகப் போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட 50வது ஆண்டு நிறைவு விழாக்கள் உலகெங்கும் கொண்டாடப்பட்டு வரும் இவ் வேளை போரின் போது மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டு தற்போது வாழ்வின் இருண்ட பக்கங்களில் இருக்கும்'' உல்லா சப் பெண்கள்'' என அழைக் கப்பட்ட முன்னாள் பாலியல் அடிமைகளுக்கு, அவர்களது வேதனையான நினைவுகளைத் தேற்றுமுகமாக நீதி வழங்கப் படுமா?

☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆

பொன்னுக்காகப் பெண்ணை வதைக்காதே!

சீதனம் உனக்குச் சிலந்தி வலை - அதை
தீயிட்டுக் காணுவோம் புதியநிலை

☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆

# களை எடுப்பு

*மங்கையரே உங்கள் மனக்குகையில் மெல்லவும் முடியாமல் முழுங்கவும் முடியாமல் சிக்கிக்கிடக்கும் சந்தேகங்களை, வாழ்க்கைப் பிரச்சினைகளை, கேள்விகளை எமக்கு எழுதி அனுப்புங்கள்.*

□ நாற்றுச்சகோதரி,

நாற்று நமது பிரச்சினைகளைப் பகிர்ந்துகொண்டு பதில் தருவதில் மகிழ்கிறேன். எனக்கு வயது 28 திருமணமாகி இரு குழந்தைகள் நான்கு வயதிலும், ஒன்றரைவயதிலும் உள்ளார்கள். எனது கணவருக்கு வயது 32 அரச கூட்டுத்தாபனம் ஒன்றில் பணியாற்றுகிறார். அவருக்கு அவருடன் தொழில்புரியும் ஒரு பெண்ணுடன் தொடர்பு இருப்பதாக அறிகிறேன். இதனால் நான் மிகவும் துன்பமடைகிறேன். இதற்கு ஏதாவது ஆலோசனையை உங்களிடம் எதிர்பார்க்கிறேன். **– அராலி தெற்கு, வட்டுக்கோட்டை.**

△ சகோதரி, தமிழீழ ஒறுப்புச்சட்டம் 273 இன் படி ஒரு ஆண் ஒரு பெண்ணுடன் மட்டுமே திருமண உறவை ஏற்படுத்தலாம. அதேபோல் ஒருபெண்ணும் ஓர் ஆணுடன் மட்டுமே திருமண உறவை ஏற்படுத்தலாம். உங்கள் கணவருக்கும் குறிப்பிட்ட பெண்ணுக்கும் இடையான உறவு நட்பு ரீதியானதா? அல்லது பாலியல் ரீதியானதா என்பதை நீங்கள் முதலில் ஆதாரபூர்வமாக உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும். ஏனெனில் நட்புரீதியாக அவர்கள் பழகுவதை நீங்கள் தவறாக கணித்தால் அது உங்கள் கணவரின் மனதைப் புண்படுத்திவிடும். ஆனால், அவர்களிடையேயான உறவு பாலியல் சம்பந்தமானதுதான் என்றால், தேசவழமைச் சட்டத்துக்கமைய நீங்கள் வழக்குத் தாக்கல் செய்யலாம்.

இதில் நீங்கள் சமூகத்தின் பழிச்சொல்லுக்கு அஞ்சியோ அல்லது பிள்ளைகளின் எதிர்காலம் சிதைந்துவிடும் என்று அஞ்சியோ பின்னிற்கக் கூடாது. ஒழுங்கு, கட்டுப்பாடற்ற ஒரு தந்தையினால் பிள்ளை வழிநடத்தப்படுவதைவிட, தந்தை இல்லாமலே வழிநடத்தப்படுவது நன்மையானது. உங்களுக்கான சட்டஆலோசனைகளையோ, மேலதிகமான உதவிகளையோ பெண்கள் ஆய்வு நிறுவனத்தினூடாகப் பெற்றுக் கொள்ளலாம்.

☐ அன்புள்ள அக்கா,

நான் இந்தவருடம் ஜீ.சி.ஈ. சா/த பரீட்சைக்கு தோற்றவுள்ளேன். அதிகம் படித்தால் பட்டமெடுத்து உத்தியோகம் பார்த்தால் பின்னாளில் நிறையச் சீதனம் கொடுக்க வேண்டிவரலாம் என அஞ்சி எனது தாயார் என்னைப் படிக்க அனுமதிக்கிறாரில்லை. எனக்கு தந்தை இல்லை. தம்பி தங்கைகள் மட்டுமே உண்டு. நான் என்ன செய்வது?

ஆனைப்பந்தியடி,
யாழ்ப்பாணம்.

△ தங்கையே, படிப்பு என்பது மிகவும் துரதிர்ஷ்டவசமாக எமது சமூகத்தில் உத்தியோகத்தையும் சீதனத்தையும் இலக்காக கொண்டுள்ளது. படிப்பது மனிதன் அறிவுரீதியாக, தர்க்க ரீதியாக சிந்தித்து தன்வாழ்வை முன்னேற்றவும் நாட்டை முன்னேற்றவுமே. எதிர்ப்புகளை பொருட்படுத்தாது தொடர்ந்து படியுங்கள். உங்கள் சொந்தக் காலில் நிற்கலாம்.

# வாழ நினைத்தால் வாழலாம்






இரு மனம் இணைந்தாலே திருமணம் - அது
சீதனம் இணைந்ததென்றால் வெறும் மனம்



அவள் ஒரு பேரழகி. தான் தொழிலாளர் வர்க்கத்தில் பிறந்துவிட்டது, தனது துரதிர்ஷ்டம் என்ற ஆதங்கம் அவளுக்கு இருந்தது. எந்தவிதமான ஆரவாரங்களுமின்றி அவளது திருமணம் நடைபெற்றது. கல்வி அமைச்சிலிருந்த ஒரு கடைநிலை எழுது வினைஞனே அவளது கணவன்.

தனது திருமணம் நிறைவான ஒன்றல்ல என்ற எண்ணம் அவளுக்கு இருந்தது. அவளிடம் நல்ல துணிமணிகளோ, விலையுயர்ந்த நகைகளோ இருக்கவில்லை. ஆனால் அவற்றையே அவள் விரும்பினாள். அவற்றிற்காகவே தான் படைக்கப்பட்டவள் என்று எண்ணினாள்.

அவளுக்கு பொறஸ்ரியர் என்ற பெயருடைய பணக்கார சிநேகிதி இருந்தாள். அவளைச் சென்று பார்ப்பதை வெறுத்தாள். போய்வந்தால் சிலநாட்களுக்கு அழவேண்டியிருக்கும்.

ஒரு நாள் அவளது கணவன்மிகவும் குதூகலமாக வந்தான். ஒரு பெரிய காகித உறை அவனது கையிலிருந்தது, ''இதை உனக்காகத்தான் கொண்டு வருகிறேன்'' என்றான்.

அவள் சடுதியாக காகித உறையைக் கிழித்தாள். ஓர் அட்டை வெளியே வந்தது. கல்வி அமைச்சும் மெடம் ரம்பொன்னோவும் ஒன்று சேர்ந்து நடத்தும் விருந்துபசாரத்திற்கான அழைப்பிதழே அது. தனது கணவன் எதிர்பார்த்தது போல் அவள் மகிழ்ச்சி அடையவில்லை. அழைப்பிதழை மேசையில் எறிந்தாள்.

''இதை வைத்துக்கொண்டு என்னை என்ன செய்யச் சொல்லுறீர்கள்?'' என்றாள்.

''நான் நினைத்தேன் நீ மகிழ்ச்சி அடைவாய் என்று. இந்த அழைப்பிதழைப் பெற எல்லாருமே முயன்றனர். எழுது வினைஞர் தரத்தில், சிலருக்கு மட்டுமே அழைப்பிதழ் கிடைத்தது. அங்கு பெரிய மனிதர்கள் எல்லாம் வருவார்கள்.''

''இப்படியான ஒரு நிகழ்வுக்கு நான் எதை அணிந்து கொண்டு செல்வது?''

''நீ நாடகக் கொட்டகைக்குப் போகும் போது அணியும் உடையை அணியலாம் தானே'' என யோசனையின்றிப் பதில்

கூறினான் லொய்செல். பின் தனது மனைவி அழுவதைக் கண்டு தனது பேச்சை நிறுத்தினான்.

''உனக்கு என்ன நடந்தது?'' என்றான் லொய்செல். மிகவும் சிரமத்துடன் தனது உணர்வுகளை அடக்கி, ''இப்படியான விருந்துபசாரத்துக்குச் செல்வதற்குத் தகுந்த உடை எதுவும் என்னிடமில்லை. இந்த அழைப்பிதழை உங்களது சிநேகிதர்கள் யாரிடமாவது கொடுங்கள். அவர்களில் யாராவது தகுதியுடன் வெளிக்கிடுவார்கள்.''

அவனது இதயம் உடைந்தது.

''இங்கே பார் மெதிடி'' என்றான் அவன். ''ஒரு நல்ல உடைவாங்க எவ்வளவு செலவாகும்?''

அவள் சிறிது நேரம் கணக்குப் பார்த்தாள். பின் '', 400 பிராங்குகள் வரையாகும்'' என்றாள்.

''சரி நான் 400 பிராங் தருகிறேன், வாங்குவதை நல்லதாக வாங்கு.''

சில தினங்களின் பின்பு மெடம் லொய்செல் மறுபடியும் வாடிய முகத்துடன் இருந்தாள்.

''உனக்கு என்ன வந்துவிட்டது?'' என லொய்செல் வினவினான்.

''விருந்துபசாரத்திற்கு அணிவதற்கு ஒரு நகைகூட இல்லையே. நான் விருந்துபசாரத்திற்கு வரவில்லை.''

''ஏன் மலர்களை அணியலாமே பத்துப் பிராங்குகளுக்கு இரண்டு, மூன்று அழகான ரோஜாப்பூக்கள் வாங்கலாம்.''

''பணக்காரப் பெண்களுக்கு நடுவில், ஏழையைப் போல் நிற்பது தர்ம சங்கடமானதொன்று'' என்றாள் மெதிடி.

''எவ்வளவு மடத்தனமாக இருக்கிறாய்? மெடம் பொறஸ்ரியரிடம் போய் சில நகைகளை இரவல் ஆக கேள்.''

மெதிடி சந்தோஷத்தால் சத்தமிட்டாள், ''அது உண்மைதான். நான் அதை நினைக்கவே இல்லை.''

அடுத்த நாள் மெடம் லொய்செல் சிநேகிதியைச் சந்தித்துத் தனது கவலையை வெளியிட்டாள்.

மெடம் பொறஸ்ரியர் தனது ஒப்பனை அறைக்குச் சென்றவள், ஒரு பெரிய பெட்டியுடன் வெளியே வந்தாள். தேவையானதைத் தெரிவுசெய்யச் சொன்னாள்.

ஓர் ''சற்றன்'' பெட்டியிலிருந்த வைர அட்டிகையில் மெதிடியின் பார்வை விழுந்தது.

''இதனை இரவல் தருவீர்களா?'' எனக் கேட்டாள், ''இது ஒன்று மட்டுமே போதுமா?'' என்றாள் மெடம் பொறஸ்ரியர். ''ஆமாம் இது மட்டுமே எனக்குப் போதும்'' என்றாள் மெதிடி விருந்துபசார நாளும் வந்தது.

வந்த பெண்களில் அவளே. அழகானவளாக இருந்தாள். விருந்தில் தன்னை மறந்து நடனம் ஆடினாள். தனது அழகுக்குக் கிடைத்த வெற்றியால் பூரிப்படைந்தாள். அதிகாலை நான்கு மணிக்கு அவர்கள் அங்கிருந்து வெளியேறினார்கள்.

வீட்டிற்கு வந்து உடைகளை அவள் களைந்த பொழுது அவளிடமிருந்து சடுதியான சத்தம் ஒன்று வந்தது. அவளது கழுத்திலிருந்த அட்டிகையைக் காணவில்லை. எல்லா இடங்களிலும் தேடினார்கள். உடை இடுக்குகளிலெல்லாம் பார்த்தார்கள்.

''நாம் வந்த வழியெல்லாம் சென்று பார்த்து வருகிறேன்'' எனக்கூறி அவளது கணவன் சென்றான். காலை ஏழுமணியளவில் வெறுங்கையுடன் வந்தான் லொய்செல்.

அவன் பொலிஸ் ஸ்ரேஷனுக்குச் சென்று முறையிட்டான். பத்திரிகைகளில், அட்டிகையைத் தேடித் தருபவர்களுக்குச் சன்மானம் தருவதாக விளம்பரம் செய்தான். போகும் இடங்களிலெல்லாம் புதிய நம்பிக்கை அவனுக்குத் துளிர்த்தது. ஒரு இரவு லொய்செல் வேலையிலிருந்து திரும்பி வந்தபொழுது அவனது முகம் வெளிறியிருந்தது. நீ உனது சிநேகிதிக்கு அட்டிகையின் கொக்கி உடைந்துவிட்டதாகவும் திருத்தியபின் கொண்டு வந்து தருவதாகவும் கடிதம் எழுது. அதற்கிடையில் நாம் அதனைத் தேடி எடுத்துவிடலாம்''. அவன் கூறக் கூற கடிதம் எழுதினாள்.

ஒரு கிழமையின் பின் அவர்கள் நம்பிக்கை இழந்திருந்தனர்.

''நாம் வைரத்தை ஈடுசெய்யும் வேலையில் இறங்க வேண்டும் என்றான் லொய்செல். தொலைந்த அட்டிகையை நினைவில் வைத்துக் கொண்டு அதே போன்ற ஒன்றை வாங்க

# மகளிர் கோட்டம்

81, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

சகலவிதமான பிளவுஸ் துணிகளுக்கும்
பெண்கள் அழகு சாதனப் பொருட்களுக்கும்

மற்றும்

பாடசாலை பாக், குடைகள்
மணிக்கூடுகள், றேடியோக்கள்
என்பவற்றை

ஒரே இடத்தில் பெறவும், பெண்களுக்
கான அழகிய தையல் வேலைகட்கும்

*நீங்கள் நாடவேண்டிய இடம்*

# மகளிர் கோட்டம்

81, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

வதற்காக கடை கடையாக ஏறி இறங்கினார்கள், "பலயிஸ் ரோயல்" என்ற நகைக்கடையில் தொலைந்த அட்டிகை போன்ற ஒன்று இருந்தது. அதனது பெறுமதி நாற்பதாயிரம் பிராங்குகள் என்றான் அந்தக் கடைக்காரன்.

மூன்று நாட்களுக்குள் தாம் அதை எப்படியும் வாங்கி விடுவதாகவும், அதனை யாருக்கும் விற்றுவிடவேண்டாம் எனத் தம்பதிகள் கேட்டுக் கொண்டார்கள்.

லொய்செலுக்கு என்று தகப்பனார் விட்டுச் சென்ற பதினெட்டாயிரம் பிராங்குகள் அவர்களிடம் இருந்தது. மிகுதியை வட்டிக்குக்கடனாகப் பெற்றார்கள்.

மெடம் பொறஸ்ரியர் அட்டிகையைப் பெற்றுக் கொண்ட போது "நீ சிறிது முன் கூட்டியே அட்டிகையை கொண்டு வந்திருக்கலாம். எனக்கும் அது தேவைப்படும் தானே" என்றாள். அவளது குரல்கலகலப்பாக இருக்கவில்லை, அவள்பெட்டியைத் திறந்து பார்ப்பாளோ என மெதிடியும் நன்கு பயந்தாள். திறந்து பார்த்து வேறு ஒரு அட்டிகை. தனது நகைக்காக மாற்றீடு செய்யப்பட்டிருக்கிறது என அறிந்தால், திருட்டுப்பட்டம் கிடைக்கும் என எண்ணினாள்.

மெடம் லொய்செலிற்கு வறுமையின் கோரப்பிடியின் தன்மை. அட்டிகை தொலைந்ததிலிருந்து விளங்க ஆரம்பித்தது. ஆரம்பத்திலிருந்து அதை வெற்றிகரமாக எதிர்கொண்டாள். பயத்தை உண்டு பண்ணிக் கொண்டிருக்கும் கடன் எப்படியும் செலுத்தப்பட வேண்டும்.

வேலையாட்கள் நீக்கப்பட்டார்கள். தொடர் மாடியை மாற்றினார்கள். ஒரு முகட்டறையை வாடகைக்கு எடுத்தார்கள்.

அவளுக்கு எப்போதும் வெறுப்பையே தரும் சமையலறை வேலைகளையும், கடினமான வீட்டுவேலைகளையும், செய்ய வேண்டிவந்தது. அவளது ரோஜா நிற நகங்கள் பாறைகளின் பின்புறங்களைத் தேய்த்துத் தேய்த்துப் பாழாகின. அழுக்குத் துணிகளை அவளே துவைத்தாள். குப்பைத் தொட்டியை அவளே தெருமுறைக்கு எடுத்துச் செல்ல வேண்டியிருந்தது. வேலைப்பழுவால் அவதியுற்றாள். இப்படித் தனக்கு வந்துவிட்டதே என நினைத்து, தன்னை மாய்த்துக் கொண்டாள்.

தண்ணீரை அவளே அள்ளிவர வேண்டியதாயிற்று. ஒரு ஏழைப்பெண் போல் பழம் விற்பவனிடமும், பலசரக்கு வியாபாரியிடமும், இறைச்சி விற்பவனிடமும் அவளே சென்றாள். அரைப்பெனிக்கெல்லாம் பேரம் பேசினாள். இதனால் நகைப்புக்குள்ளானாள்.

ஒவ்வோர் மாதமும் சில பத்திரங்களுக்கான பணம் செலுத்தப்பட்டது. சிலபத்திரங்கள் புதுப்பிக்கப்பட்டன. அவளது கணவன் பின்நேரங்களில் ஒரு வியாபாரிக்குக் கணக்கெழுதினான். இரவில் ஒருபக்கத்துக்கு இரண்டரைப் பென்சுகள் என்ற கணக்கில் பிரதிபண்ணிக் கொடுத்தான். இப்படியாக அவர்களது வாழ்க்கை பத்து வருடங்கள் ஓடியது.

மெடம் லொய்செல் இப்போது வயதடைந்தவள் போலானாள். சாதாரணமான வீட்டுப்பெண்களது கைகளைப்போல் அவளது கைகளும் கடினமானவையாகவும், பலம் பொருந்தியவையாகவும் மாறியிருந்தன. அவள் தலையை ஒழுங்காக வாரிவிடுவதில்லை. அவளது உடைகள் சகிக்கமுடியாதவையாக இருந்தன. அவளது குரல் கிரிச்சிடுவதுபோல் ஒலிக்கும்.

கணவன் வேலைக்குப்போய் இருக்கும்போது, சிலவேளைகளில் யன்னலை மூடிவைத்துக்கொண்டு, என்றோ நடந்த அந்த விருந்துபசாரம் பற்றி எண்ணியபடி இருப்பாள். அன்றுதான் எல்லோரையும் கவர்ந்து அழகாக இருந்தது அவளுக்கு ஞாபகம் வரும். அன்று, அவள் அந்த நகையைத் தொலைக்காமல் இருந்திருந்தால் இவை எல்லாம் நடந்திருக்குமா? யாருக்குத்தான் தெரியும். வாழ்வு மிகவும் விசித்திரமானது என்றெல்லாம் நினைப்பாள்.

ஒரு ஞாயிற்றுக்கிழமை. மெடம்லொய்செல் வேலைப்பழுவிலிருந்து விடுபட '' சாம்ஸ் - எலிசீஸ் '' பக்கமாக நடந்து கொண்டிருந்தாள். மெடம் பொறஸ்ரியரும் ஒரு சிறுபிள்ளை உடன்வர அங்கு வந்துகொண்டிருந்தாள்.

அப்போதும் இளமையுடனும் கவர்ச்சியாகவும் மெடம் பொறஸ்ரியர் திகழ்ந்தாள்.

மெடம் பொறஸ்ரியருடன் கதைக்க வேண்டும் என்ற ஆசை மெதிடிக்கு ஏற்பட்டது. நடந்தவற்றை அவளுக்குச்

சொல்ல வேண்டும் என்று எண்ணினாள். கடனையும் திருப்பிச் செலுத்தி விட்டாள்தானே ஏன் பேசக்கூடாது!

மெடம் பொறஸ்ரியர் நின்ற இடத்திற்கு மெடம் லொய்செல் சென்று ''காலை வந்தனங்கள்'' என்றாள்.

மெடம் பொறஸ்ரியரால் மெதிடியை மட்டிட முடியவில்லை. யாரோ ஒரு ஏழைப்பெண் தன்னுடன் சரிசமனாக நின்று பேசுவதைக் கேட்டு அவள் வியப்படைந்தாள். ''நீ யார்! உன்னை எனக்குத் தெரியாதே'' என்றாள், மெடம் பொறஸ்ரியர்.

''நான்தான் மெடம் லொய்செல்'' என்றாள் மெதிடி.

''ஓ......நீ எப்படி மாறிவிட்டாய்'' என்றாள் மெடம் பொறஸ்ரியர்.

''ஆமாம். உங்களைக் கடைசியாகக் கண்டபின்பு நான் பலவிதமான துன்பங்களை அனுபவித்துவிட்டேன். எல்லாம் உங்களின் பொருட்டே நடந்து விட்டது.''

''என்ன எனது பொருட்டா? அது எப்படி'' என்றாள் மெடம் பொறஸ்ரியர். ''கல்வி அமைச்சில் நடந்த ஓர் நடன விருந்துபசாரத்திற்காக ஓர் வைர அட்டிகையை உங்களிடம் வாங்கிப்போனேன். அது உங்களுக்கு நினைவிருக்கிறதா?''

''ஆமாம். ஆனால் அதைத்தான் திரும்பத் தந்துவிட்டாயே'' என்றாள் மெடம் பொறஸ்ரியர்.

''நான் நீங்கள் தந்த நகையைத் தொலைத்து விட்டேன். அது போன்ற ஒன்றை அதற்கு மாற்றீடாகக் கடையில் வாங்கித் தந்தோம். அது எமக்கு சுலபமானது அல்ல என உங்களுக்குத் தெரியும். எம்மிடம் பணம் இல்லை. எப்படியோ கடன்களைச் செலுத்தி விட்டோம். நான் அதனால் சந்தோசம் அடைந்திருப்பது என்னவோ உண்மைதான்.''

மெதிடி பேசுவதை மெடம் பொறஸ்ரியர் இடைமறித்தாள். ''நீ நான் தந்த அட்டிகை போன்ற தொன்றைத் தான் கொண்டுவந்ததாகவா கூறுகிறாய்.''

'' உண்மைதான். ஆனால் நீங்கள் அதனைக் கவனித்திருக்க மாட்டீர்கள். இரண்டும் ஒரே மாதிரித்தான் இருக்கும்'' மெதிடி பெருமையுடனும் வஞ்சகமின்றியும் சிரித்தாள். இதனைக்கேட்ட மெடம் பொறஸ்ரியர் நன்றாக கலங்கிப்போய் விட்டாள். மெதிடியின் இரண்டு கைகளையும் பிடித்துக் கொண்டாள்.

'' ஓ என்னருமை மெதிடி......ஆனால் என் அட்டிகை போலியானது. அது மிக அதிகமானால் ஐந்நூறு பிராங்குகளுக்கு மேல் போகாது..... '' ○

குறிப்பு:- மாபசானின் புகழ்பெற்ற/ நெக்லஸ் என்ற சிறு கதை சுருக்கிய வடிவிலேயே இங்கு மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

ஆங்கிலம் வழியாக தமிழில்
சு. மகேந்திரன்.

மாபசான் 1850 ஆம் ஆண்டு பிரான்சில் பிறந்தார். கல்வி கற்றுவிட்டு எழுத ஆரம்பித்தார். அக்காலத்தில் ஏற்பட்ட பிரெஞ்சு ஜேர்மன் போரில் பங்கு கொண்டார். பல கதைகள் அப்போரை அடிப்படையாகக் கொண்டவை. நூற்றுக் கணக்கான சிறுகதைகளையும் பலகுறுநாவல்களையும் சில நாவல்களையும் எழுதினார். 1892 இல் நோய்வாய்ப்பட்டு இறந்தார். சிறுகதைத்துறை என்று வரும்போது இன்றும் நினைவு கூரப்படுகிறார்.

பொருளற்ற பெண் என்றால்
உயிரற்றசடமா?
இருளுக்குள் வாழ்வது தான்
இவர்களின் விதியா?

# இது இவர்களைப் பற்றி...!

## மரியா மொன்டிசொரி [Montessori, Maria]

**20** ஆம் நூற்றாண்டின் புதுக் கல்வி முறைகளுள் ஒன்றாகக் கருதப்படும் மொண்டிசொரி பாடசாலை முறையை தோற்றுவித்த இத்தாலியப் பெண்மணி தான் மரியா மொண்டிசொரி அம்மையார். இத்தாலியிலுள்ள அன்கோனாவிக்கு அண்மையில் உள்ள சியாராவல்லி என்ற சிறு நகரத்தை பிறப்பிடமாகக் கொண்ட இப் பெண்மணி இராணுவ உத்தியோகத்தரான செவாலியர் அலெக்சாண்டர் மொண்டி சொரிக்கும், ரெனில்ட் ஸ்ரெப்பனிக்கும் மகளாக 31.08.1870 இல் பிறந்தவர். இவர், விருத்தி செய்த மொண்டி சொரி முறையானது குழந்தைப் பருவத்திலேயே குழந்தைகளுக்கு பொறுப்புணர்ச்சி உண்டாக்கி அதன் மூலம் கட்டுப்பாட்டையும், ஒழுக்கத்தையும் உண்டாக்குவதனூடாக அவர்களை வளர்ச்சியடைந்தசகிப்புத்தன்மை வாய்ந்த பிள்ளைகளாக வளர்த்தெடுப்பதற்குரிய பயிற்சிகளை அளிப்பதை அடிப்படையாகக் கொண்டது. மனிதர்களின் உணர்வுரீதியான தேவைகள் அவர்களின் பிள்ளைப்பருவத்திற்கும் வயது வந்த நிலைக்குமிடையில் தொடர்ச்சியான முறையில் மாற்றத்திற்குள்ளாகின்றன என்றும் ஆசிரியர்கள் இத் தேவைகளை இனங்கண்டு அதனை அங்கீகரித்து ஒவ்வொரு புதிய தேவையையும் பூர்த்தி செய்வதற்குப் பிள்ளைகளுக்கு உதவுவதன் மூலம் தான் வளர்ச்சி பெற்ற, சகிப்புத்தன்மை வாய்ந்த பிள்ளைகளை வளர்த்தெடுக்க முடியும் என்றும் மிகுந்த நம்பிக்கை கொண்ட இவர் இவ் அடிப்படையில் தான் மொண்டிசொரி முறையையும் இவ்வுலகிற்கு அறிமுகப்படுத்தினார். ஒன்றரை வயதிற்கும் ஐந்து வயதிற்குமிடையிலான குழந்தைகளுக்கு ஐம்பொறிகள் மூலம் வளர்ச்சி உண்டாக்குதல் முக்கிய அம்சமாக கருதப்பட்டு ஐம்புலன்களைத் தூண்டும் துணைக் கருவிகள், உள்ளங்கவரும் கைவேலை, சுதந்திர வாழ்வு, அன்புச்சூழ்நிலை என்பனவற்றின் மூலம் மந்த புத்தியுள்ள சிறுவர்களையும் புத்திசாலிகளாக்க முடியும் என்பதை பரீட்சித்து அனுபவ பூர்வமாக கண்டுணர்ந்து அதனையே செயற்படுத்தி வெற்றி கண்டவர் இவர்.

*புதிய ஒரு கல்வி முறையின் கண்டுபிடிப்பாள ராக மட்டுமன்றி ஒரு மருத்துவராக, மனோவியல் நிபுணராக, மானுடவியல் தலைவராக, நிறுவன இயக்குனராக, பேராசிரியராக, பாடசாலைகளுக் கான அரச பரிசோதகராக, சிறந்த நூலாசிரிய ராக, தலைசிறந்த பெண்ணியவாதியாக பல தரப் பட்ட கோணங்களிலும் இவரது ஆளுமையின் வெளிப்பாட்டை நாம் காணமுடியும்.*

கல்வித் துறைக்கு அளப் பரிய சேவை செய்த இப் பெண் மணி ஒரு மருத்துவர் என்பது ஆச்சரியமான உண்மை. பெண் கல்வி முக்கியத்துவம் பெறாத காலத்திலேயே ரோம் பல்கலைக் கழகத்தில் மருத்துவக் கல்வி பயின்று 1894 ஆம் ஆண்டு இத்தாலியின் முதல் மருத்துவப் பட்டம் பெற்ற இத்தாலியப் பெண்மணி என்ற புகழை தன தாக்கிக் கொண்டவர் இவர். ரோம் பல்கலைக்கழகத்தில் மனோவியல் சிகிச்சைப் பகுதி யில் உதவி மருத்துவராக பணி யாற்றிய காலத்தில் மனரீதியாக பாதிக்கப்பட்ட அல்லது மந்த புத்தியுடைய சிறுவர் கல்வி தொடர்பான பிரச்சினைகளில் ஆர்வங் கொண்ட இவர் இரு வருடங்கள் மந்த புத்தியுடைய வர்களின் வளர்ச்சிக்கான ஆராய்ச்சி நிலையம் ஒன்றிற்கு தலைவராக இருந்து பாதிக்கப் பட்ட சிறுவர்களுக்கு பணி புரிந்தார். பின்பு சாதாரண சிறுவர்களுக்கும் இப்போதனை முறையை பிரயோகித்து கற்பித் தலில் ஈடுபட்ட இவர் சமூக அந்தஸ்துள்ள உயர் தொழி லாக இன்றும் கருதப்படும் மருத் துவத் தொழிலைக் கைவிட்டு இறுதிவரை ஆசிரியத் தொழிலி லேயே தொண்டாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.

1896 - 1906 வரை ரோமி லுள்ள பெண்கள் கல்லூரி ஒன் றில் சுகாதாரத் துறைத் தலை வராக இருந்த இவர் 1904- 1908 வரை ரோம் பல்கலைக்கழகத் தின் மானுடவியல் தலைவராக வும் பணியாற்றினார். இக் காலப்பகுதியில உளவியல், தத் துவம், கல்வி போன்றவற்றில் தொடர்ந்து ஆய்வுகளில் ஈடு பட்ட இவர் 1907 ஆம் ஆண்டு ரோமிலுள்ள சான்லோறன் சாவிலுள்ள சேரிபபுறப் பகுதி யொன்றிலிருந்து இத்தாலிய அரசினால் தருவிக்கப்பட்ட 3- 6

லயதுடைய 60 சிறுவர்களுக்கென முதன் முதலாக பாலர் இல்லம் ஒன்றை ஆரம்பித்து தனது முறைகளைப் பிரயோகித்து வெற்றியடைந்ததன் மூலம் சாதாரண குழந்தைகளுக்கும் கூட தனது முறையைப் பின்பற்றி கற்பித்தலில் ஈடுபட்டார். இவரது முறை பிரபல்யமடைந்ததனூடாக இதனைப் போன்ற பாலர் இல்லங்கள் நாடு முழுவதும் பரவலாகத் தோற்றம் பெற்றதுடன் இவரது புகழ் அயல் நாடுகளுக்கும் பரவியது. குழந்தைகள் சுதந்திரமான சூழலில் நடந்து கொண்ட முறைகள் பற்றிய குறிப்புக்களே பிற்காலத்தில் மொண்டி சொரி முறையாக பிரபல்யமடைந்தது. தொடர்ந்து நாற்பது வருடங்கள் இவர் ஐரோப்பா, இந்தியா போன்ற இடங்களுக்கு பயணஞ் செய்து இம் முறை பற்றிய விரிவுரைகளை ஆற்றியதுடன் எழுத்துத்துறையிலும் ஆசிரியப் பயிற்சிச் செயல்திட்டங்களிலும் முழுமையாக தன்னை ஈடுபடுத்திக் கொண்டார்.

இவரது பிரசித்தி பெற்ற ஆக்கங்களாகக் கருதப்படுபவை: மொண்டிசொரி முறை (1912), உயர்நிலை மொண்டி சொரி முறை (1917), குழந்தைத்துவ இரகசியம் (1936), புதிய உலகிற்கான கல்வி (1946), குழந்தையின் கண்டுபிடிப்பு (1948), உள்வாங்கும் மனம் (1949), மனிதனின் உருவாக்கம் (1955) என்பவையாகும். இந் நூல்கள் இருபது மொழிகளுக்கும் மேலாக மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

1913ஆம் ஆண்டு அமெரிக்கா சென்று மொண்டி சொரி முறையை பரவச்செய்த இவர்பின் பொருமுறை சான்பிரான்ஸ்சிஸ் கோவில் நடைபெற்ற உலகக் கண்காட்சியில் சிசுக்கள் பள்ளிக்கூடம் ஒன்றை நடத்திக் காட்டி தங்கப்பதக்க மொன்றையும் பரிசாகப் பெற்றுக் கொண்டார். 1926ஆம் ஆண்டு ஆர்ஜென்ரினா சென்று அங்கும் தனது முறையின் நன்மைகளை எடுத்துக் காட்டினார். இம் முறையைப் பின்பற்றி எல்லா இத்தாலியக் குழந்தைகளையும் பாசிஸ்டுகளாக்கலாம் என நினைத்த முசோலினியை எதிர்த்ததன் விளைவாக 1934இல் நாட்டை விட்டு வெளியேறிய இவர் ஸ்பெயின், இங்கிலாந்து, ஹோலந்து, இலங்கை போன்ற இடங்களில்வசித்து இறுதியில் நெதர்லாந்தில் நிரந்தரமாகக் குடியேறினார். 1929இல் நெதர்லாந்தை தலைமைச் செயலகமாகக் கொண்டு இவர் அமைத்த சர்வதேச மொண்டி சொரி அமைப்புடன் ஏனைய நாடுகளிலும் தோற்றுவிக்கப்பட்ட பயிற்சி நிலையங்கள் தம்மை இணைத்துக் கொண்டன.

இவரது வாழ்க்கைக்காலத்தில் இத்தாலியிலுள்ள பாடசாலைகளுக்கான அரச பரிசோதகராக

வும் பருஜியா பல்கலைக்கழகத்தின் உளவியல் தலைவராகவும் கடமையாற்றிய இவர், இறுதி வரை குழந்தைகள் முன்னேற்றத்திற்காகவே பாடுபட்டார். குழந்தைகளின் கருப்பருவத்திலும் பிறந்த மூன்று ஆண்டுகள் வரைக்கும் எவ்வெவ்வாறு நடந்து கொண்டால் அவர்களை பண்பட்ட மக்களாக்கலாம் என்று இறுதிவரை ஆய்வுகளை மேற்கொண்டிருந்த இப்பெண்மணி 1952 மே மாதம் 6ஆம் திகதி இவ்வுலக கடமைகளை நிரந்தரமாக முடித்துக் கொண்டார். எனினும் இப்பூவுலகம் உள்ள வரை இப்பெண்மணியும், இவரது கண்டுபிடிப்பான மொண்டிசொரி முறையும் வாழும் என்பதும், பெண்கள் உலகிற்கு பெருமை சேர்க்கும் அறிவியலாளர் பதிவேட்டில் இவரது இருப்பும் நிரந்தரமானது என்பதும் பெண்கள் உலகை பெருமை கொள்ளச் செய்கின்றது.

- குந்தவை □

எங்களிடம் மங்கள வைபவங்களுக்குரிய

※ எவர் சில்வர்,

※ பிளாஸ்டிக் வகைகள்,

※ பரிசுப் பொருட்களும்;

※ அலுமினியம், வீட்டுப் பாவனைப் பொருட்களும்

மொத்தமாகவும், சில்லறையாகவும் சகாயமான விலைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

**செல்லையா விற்பனை அகம்**

118, 119, கே. கே. எஸ். வீதி,

யாழ்ப்பாணம்.

*'' மூன்றாவது இதழ் விரிக்கும் ' நாற்று ' முதிர்ந்து கதிர் வீசிட எம் இதயம் கனிந்த நல்லாசிகள் ''*

# தன்னம்பிக்கை துணிச்சல் முயற்சி

ஒளியற்றோருக்கு ஒளியாக இருந்து காலம் முழுமையும் அவர்களுக்காகவே தன்னை அர்ப்பணித்து வாழும் தியாக உள்ளம் படைத்த உன்னதப் பெண் ஒருவரை நாற்று வாசகர்களுக்காக சந்திக்கப் போகின்றோம் என்ற உணர்வே மனதில் ஒரு தூய்மையையும் மரியாதை உணர்வையும் தோற்றுவிக்க உடுவிலில் விழிப்புலனற்றவர்களுக்காக இயங்கி வரும் 'வாழ்வகத்தினுள்' காலடி எடுத்து வைத்தோம். கருணை வடிவும் புன்னகையுடன் கூடிய மலர்ந்த முகத்தோற்றமும் கொண்ட உருவம் ஒன்று எங்களை வரவேற்றது. அதிகாரத்துவத்தைக் காட்டாத



நிமிர்ந்த உறுதியான நடை, வாழ்வின் பெரும் பகுதியையும் ஓர் உன்னத சேவைக்கு அர்ப்பணித்திருக்கின்றோம் என்பதில் நிறைவைக் காட்டுகின்ற ஒளிவாய்ந்த கண்கள், ஆதரவற்றவர்களுக்கு ஊன்றுகோலாக, கொழுகொம்பாக நிற்பதை உறுதிப்படுத்துகின்ற உயர்ந்த, மெல்லிய திடம் வாய்ந்த தோற்றம், எல்லோருமே எனது குழந்தைகள் தான். அவர்களுக்கு தேவை அன்பும், ஆதரவும் தான். அது என்னிடம் தாராளமாகவே உண்டு என்பதை கூறாமல் கூறுகின்ற கருணை வடிவமான மலர்ந்த முகம். இத்தகைய இலட்சணங்கள் வாய்ந்த அவ் உருவத்தைப் பார்த்ததுமே வாழ்வகத்தில் தலைவியை எமக்கு அடையாளங் காட்ட வேண்டிய தேவை அவசியமற்றுப் போக நேர்காணலுக்காக எம்மைத் தயார்படுத்திக் கொண்டோம்.

☆ 'நாற்று' சஞ்சிகையின் வாசகர்களுக்காக தங்களை அறிமுகஞ் செய்யுங்களேன் ?

☼ எனது பெயர் அன்னலட்சுமி சின்னத்தம்பி. எனக்கு இப்போது 58 வயதாகின்றது. இராமநாதன் கல்லூரியில் க. பொ. த சாதாரண தரம் வரை கல்வி கற்று சித்தியடைந்தபின் நான் விரும்பிய தொழிலான ஆசிரிய தொழிலில் பயிற்சி பெற திருநெல்வேலியில் சைவ ஆசிரிய கலாசாலையில் பயிற்சி எடுத்தேன். 1960 - 1968 வரை அலுத்கம சாஹிரா கல்லூரியில் சாதாரண ஆசிரியராக கடமையாற்றியபின் கொழும்பு விவேகானந்தா கல்லூரியிலும் கடமையாற்றிவிட்டு 1971 இல் பார்வையற்ற மாணவர்களைக் கற்பிற்கும் முறை பயிற்சி எடுத்துவிட்டு அத்திட்டத்தின் கீழ் ஆசிரியராக கடமையாற்றிவிட்டு தற்போது வாழ்வகத்தை நடாத்தி வருகிறேன்.

☆ வாழ்வகம் என்ற பெயருடன் இயங்கும் இந்த அமைப்பின் தோற்றம் பற்றி சிறிது விபரமாகக் கூறுவீர்களா ?

☼ ஆரம்பத்தில் அதாவது 1972ஆம் ஆண்டு முதன் முதலாக றிபேக் கல்லூரியில் படித்து வந்த இரண்டு பார்வையற்ற பிள்ளைகளுக்கு பிறெய்லி மூலம் கற்பிக்கத் தொடங்கியதுடன் எனது சேவையை ஆரம்பித்தேன். தொடர்ந்து பருத்தித்துறை, சாவகச்சேரி, யாழ்ப்பாணம் என்று பல இடங்களுக்குச் சென்று பாடசாலைகளில் பிள்ளைகளுக்கு கற்பித்தேன். படிப்படியாக பிள்ளைகளின் தொகை அதிகரிக்

கவே எனக்கு இதனை ஒரு அமைப்பாக தொடங்கவேண் டும் என்ற ஆர்வம் ஏற்பட்டது. சமுதாயத்துடன் ஒன்றி வாழ்வதற்கு பிள்ளைகள் தன்னம்பிக்கையுடையவர்களாக வளர்க்கப்பட வேண்டும். ஒரு அமைப்பின் கீழ் ஒன்றாக வாழும் சூழ்நிலையில் நாம் ஒன்று சேர்ந்திருக்கின்றோம் என்ற உணர்வே எமக்குள் ஒரு வலிமையை தோற்றுவிக்கும் என்று கருதினேன். இந்த அடிப்படையில் 1987இல் லயன்ஸ் கிளப் ஆதரவுடன் மல்லாகத்தில் ஒரு இல்லத்தை ஆரம் பிப்பதற்கு திட்டம் வடிவமைக்கப்பட்டது. போராட்ட சூழல் காரணமாக இத்திட்டம் இடைநிறுத்தப்பட்டது. ஆனாலும் எனது ஆர்வமும் முயற்சியும் குறையவில்லை. பின்பு தெல்லிப்பழையில் அமிர்தலிங்கத்தின் அலுவலகமாக இருந்த ஒரு வீட்டில் வாழ்வகம் ஆரம்பிக்கப்பட்டது. 1990ஆம் ஆண்டு பிரச்சினையுடன் பிள்ளைகளை அவர் களின் பெற்றோர் கூட்டிச்சென்றுவிட்டனர். பின்பு வீடு இன்றி துன்பப்படும் நிலையில் 1992இன் இறுதியில் தமிழீ ழத் தேசிய தலைவரின் உதவியால் உடுவிலில் உள்ள இந்த வீடு கிடைத்தது. வாழ்வகம் என்ற பெயருடன் இயங்கும் இந்த இல்லத்தில் இன்று 11 ஆண்களும் 14 பெண்களு மாக 25 பேர் கொண்ட அமைப்பாக வளர்ந்திருக்கின்றது.

☆ பொதுவாக பெண்களாகப் பிறக்கும் எல்லோருமே பரு வத்தே பயிர் செய் என்பதற்கிணங்க அந்தந்த வயதில் திருமணம், வாழ்க்கை, கணவன், பிள்ளைகள் என்ற வட்டத் திற்குள் நிற்கும்போது நீங்கள் மட்டும் இப்படியானதொரு உன்னத சேவைக்கு தங்களை அர்ப்பணித்துள்ளீர்கள். இதற்கான பின்னணி எதுவாக இருக்கும் என்பதை அறிய லாமா ?

☼ சராசரி மனித வாழ்க்கை எல்லோருக்கும் பொதுவானது. வாழ்க்கையில் உள்ள ஆசைகள், எதிர்பார்ப்புகள் என்பவற் றிற்கு யாருமே விதிவிலக்காக முடியாது. என்னைப் பொறுத்தவரைக்கும் எப்படியும் வாழலாம் என்று நினைக் கும் மனிதர்களுள் ஒருவராக வாழ்வதைவிட இப்படித்தான் வாழவேண்டும் என்று வாழ்வுக்கு வரையறை செய்து எந்த இன்னல்பட்டாலும் அந்த வரையறைக்குள் நிற்பதற்கு முயற்சிசெய்யும் மனிதர்களுள் ஒருவராக இருக்கவே விரும்பு கின்றேன். அறிவு, ஆளுமை, மட்டுமன்றி போதியளவு

மா நகர சபை
யாழ்ப்பாணம்

ஆன்ம பலம், முயற்சி, சமூக நலன், இரக்க சிந்தை போன்ற வற்றை ஆதாரமாகக் கொண்டே இத்தகைய ஒரு வாழ்க் கையை கட்டியெழுப்ப முடியும். இதற்கான முயற்சியில் வேகத்துடன் இறங்கும் போது சராசரி மனிதனுக்குள் எழும் ஆசா பாசங்கள் எல்லாம் அடிபட்டுப் போய்விடுகின்றன. சிறுவயதிலிருந்தே துன்பப்படுகிறவர்களைப் பார்த்து இரங் கும் இரக்க சிந்தை தான் சாதாரண மனித உணர்வுகளு டன் வாழ்ந்த என்னை, அந்த வாழ்வை தியாகம் செய்து அதற்கும் மேலான இத்தகைய சேவைக்கு முழுமையாக என்னை அர்ப்பணிக்க உதவியது என்று தான் நினைக்கின் றேன்.

☆ சமூக நலனில் ஆர்வங்கொண்டு அதற்கென பணியாற்ற விரும்புகின்ற பெண்களுக்கு திருமணம் ஒரு தடையாக இருக்கும் என்று கருதுகின்றீர்களா ?

☼ இல்லை. நிச்சயமாக நான் அப்படி நினைக்கவில்லை. ஆனால் தேர்ந்தெடுக்கும் பணியின் முக்கியத்துவத்தைப் பொறுத்து இது மாறுபடக்கூடும். நான் தேர்ந்தெடுத்திருக்



கும் பணி ஒரு குடும்ப அமைப்பைப் போன்றது தான். தாய்க்குத் தாயாக இருந்து பிள்ளைகள் அனைவரையும் தமது பிள்ளைகளாக கருதும் மனப்பக்குவம் இதற்கு அவசிய மானது. வெறுமனே பணமும், வசதியும் மட்டும் இத்தகைய அமைப்பின் இயக்கத்திற்கு உதவி செய்ய முடியாது. எனக் கென்று ஒரு வாழ்க்கையை தேர்ந்தெடுத்துக் கொண்டால் இந்தக் குடும்ப அமைப்பில் உள்ள கவனம் குறைந்து விட அல்லது சிதறி விட வாய்ப்புண்டு என்பதற்காகவே நான் எனது வாழ்வை இதற்கென தியாகம் செய்தேன். தியாகம் செய்தேன் என்று கூடச் சொல்வதற்கில்லை. ஏனெனில் வாழ்வகத்தில் நானும் பிள்ளைகளுடன் வாழ்ந்து கொண்டு தான் இருக்கின்றேன். இதனது அர்த்தம் சமூக சேவை செய்ய விரும்பும் எவரும் திருமணம் செய்தல் கூடாது என்பதன்று.

☆ சமூக நலனில் அக்கறை கொண்டு அதற்கென சேவை செய்யவிரும்புபவர்கள் எத்தனையோ வகைகளில் சமூகத்திற்கு பணி செய்கிறார்கள். அத்தகைய பணிகளில் நீங்கள் இப்படி ஒரு வாழ்வகத்தை தோற்றுவிப்பதற்கு உங்களை தூண்டிய காரணி ஏதாவது உண்டா?

☼ ஆம். நான் 1968இல் கொழும்பில் கடமையாற்றிக் கொண்டிருக்கும்போது எனக்கு ஒரு சிநேகிதி இருந்தார். இவர் கொழும்பில் பாடசாலையில் பிறெய்லி டிப்புளோமா பயின்று அதில் தேறி கண் பார்வையற்ற பிள்ளைகளை வைத்து பராமரித்து வந்தார்; நூல்வடிவில் எதையும் அறியும் போது அதில் எமது சிந்தை ஆழமாகப் பதிவ தில்லை. ஆனால் எதையும் கண்கூடாகக் காணும் போது அதன் தாக்கம் மனதில் மிக ஆழமாக பதிந்து விடுவது இயல்பு. இந்த அடிப்படையில் எனது சிநேகிதியின் சேவையை கண்கூடாகப் பார்த்த போது இத்தகைய ஒரு சேவை எமது மண்ணுக்கு மிக அவசியம் என்ற உணர்வு என் மனதில் ஆழமாக வேரூன்றியது. இயல்பாகவே என் னிடம் இருந்த இரக்க சிந்தை இந்த ஒன்றைச் செயற் படுத்துமளவிற்கு வளர்ந்து இன்று உங்கள் முன் வாழ்வக மாக இயங்குகின்றது.

☆ மனிதராகப் பிறக்கும் எவருமே ஏதாவது ஒரு இலட் சியத்தை முன் வைத்து அதை நோக்கி போவதற்குரிய



[library stamp, illegible]

முயற்சிகளை மேற்கொள்வார்கள். இவ்வகையில் வாழ் வகத்தின் இலட்சியம் என்ன என்பதை கூறுவீர்களா ?

☼ எனது பிள்ளைகளுக்கு இயலுமானளவிற்கு கல்வி வாய்ப்பை வழங்கவேண்டும். கல்வியறிவு மட்டுமன்றி அவர்கள் பிறர் தயவில் நிற்காது தமது சொந்தக் காலிலே நிற்பதற்கு வேண்டிய வகையில் தன்னம்பிக்கை உள்ளவர்களாக வளர வேண்டும். சுயதொழில் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக் கும் அளவிற்கு சிறுகைத்தொழிலில் பயிற்சியளிக்க வேண் டும். நாம் அங்கவீனர்கள், ஆதரவற்றவர்கள் என்ற மன உளைச்சலுக்குள்ளாகாமல் அமைதியைத் தோற்றுவிக்கக் கூடிய இசைத்துறை நுணுக்கங்களை அவர்களுக்கு பயிற்று வித்து சமுகத்தில் நாமும் ஓர் அங்கம் என்ற உணர்வை அவர்களுக்கு ஏற்படுத்தி சமுதாய நீரோட்டத்தில் அவர் களும் கலந்துவிடுமளவிற்கு அவர்களை வளர்த்துவிட வேண்டும் என்பதே எனது அவா.

☆ உங்களது முயற்சியில் நீங்கள் இதுவரை சாதித்தது என்ன என்று கருதுகிறீர்கள்?

☼ ஆரம்பத்தில் இரு பிள்ளைகளுடன் ஆரம்பித்த இவ் அமைப்பு இன்று 25 பிள்ளைகளைக் கொண்ட ஒரு அமைப் பாக வளர்ச்சி கண்டுள்ளது. இதுவரைக்கும் 10 பிள்ளை கள் இதிலிருந்து வளர்ந்து, படித்து பட்டதாரிகளாக வெளி யேறியிருக்கின்றார்கள். இசைத்துறை சார்ந்த அனைத்துக் கலைகளையும் அவர்களுக்கு பயிற்றுவிக்கின்றேன். கலை நிகழ்ச்சிகளில் அவர்கள் பங்கேற்று பாராட்டுதல்களையும் பெற்றிருக்கின்றார்கள். அவர்களுக்கு சிறுகைத்தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்க என்னாலான மட்டும் முயன்று வருகின்றேன். பிள்ளைகள் தமது சொந்த வேலை களை மட்டுமன்றி வாழ்வகத்தின் இயக்கத்திற்கும் அதனது தூய்மைக்கும் ஒழுங்குக்கும் தம்மாலான வகையில் செய் வதற்கு ( ஏற்றவகையில் ) அவர்களை பயிற்றுவித்திருக்கின் றேன்.

☆ தங்களது ஓய்வு நேரங்களை எப்படிப் பயன்படுத்திக் கொள் கின்றீர்கள்?

☼ பொதுவாக எதையும் வேலை, கடமை, அலுவல் என்று கருதிச் செய்யும் போது அதற்கு ஓய்வு மிக மிக அவசியம்

என்பதை ஏற்றுக் கொள்கின்றேன். என்னைப் பொறுத்த வரைக்கும் இதனை ஒரு வேலையாகக் கருதி நான் செய்ய வில்லை. வாழ்வகத்தின் தலைவியாக என்னைப் பார்ப் பதைவிட இதுவே எனது சராசரி வாழ்வாக நான் கொண் டிருப்பதால் ஓய்வு தேவை என்ற உணர்வே என்னிடம் இல்லை. பிள்ளைகளின் நாளாந்த தேவைகளை கவ னித்து அவர்களுக்கு பாடம் சொல்லிக் கொடுத்து அவர் களைப் பராமரிப்பதற்கே எனது பொழுது முழுவதும் செலவாகிவிடுகின்றது. அவ்வாறு ஓய்வு தேவை எனக் கருதினால் கூட பிள்ளைகளுக்கும் அது தேவை யென கருதி சுற்றுலாவுவதற்கு அழைத்துச் செல்வது, கலைநிகழ்வுகளில் பங்கு கொள்வது போன்றவற்றையே தேர்ந்தெடுத்து செய்வதால் நானும் எனது பிள்ளைகளும் ஓய்வைப் பெற்றுக்கொள்கின்றோம்.

☆ வாழ்வகம் இயங்குவதற்கு தேவையான நிதியை எங்கிருந்து பெற்றுக்கொள்கின்றீர்கள்?

☼ பொதுவாக அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவியுடனும் பொது நலன் விரும்பிகளின் ஆதரவுடனும் தான் வாழ்வகம் இயங்குகிறது. துர்க்கை அம்மன் தேவஸ்தானம், சத்திய சாயி நிறுவனங்கள், லயன்ஸ் கழகம், றோட்டரிகிளப் போன்ற அமைப்புக்கள் எமக்கு உதவுகின்றன. அத்துடன் சமூக நலன் விரும்பிகளின் ஆதரவும் எமக்கு உண்டு.

☆ பார்வையற்றவர்கள் என்ற காரணத்திற்காக வாழ்வகத்தின் பிள்ளைகளை பராமரிப்பதில் ஏதாவது சிரமங்களை எதிர் நோக்குகின்றீர்களா?

☼ இல்லை. அங்கத்தில் குறைபாடு உடைய பிள்ளைகளுக்கு ஆண்டவன் சராசரி மனிதனை விடவும் மிகவும் நுண்ணிய உணர்வுகளைப் படைத்திருக்கின்றான். சரியான முறையில் அவர்களைப் பயிற்றுவித்தால் சாதாரண மனிதரைக் காட் டிலும் அவர்களை மிகவும் திறமையுடையவர்களாக மாற்றி விடலாம். எனது பிள்ளைகள் பொதுவாக காலை 5.00 மணிக்கே எழும்பிவிடுவார்கள். படிப்பவர்கள் 3.00 மணியள வில் எழும்புவார்கள். வீட்டைத் துப்புரவு செய்தல், குளித்தல், உடைகழுவுதல், போன்ற வேலைகளை அவர்களே செய்கின் றார்கள். சமையலுக்கு மட்டும் ஆள் ஒருவர் உண்டு.

சமையலுக்கு தேவையான துணை வேலைகளை இவர்களே செய்து கொடுக்கிறார்கள். சிறுபிள்ளைகளைப் பெரிய பிள்ளைகள் பார்ப்பார்கள். தமது வேலைகளை தாமே கவனிப்பதற்கு நான் பயிற்றுவித்திருப்பதனால் எனக்கு அவர்களைப் பராமரிப்பதில் எவ்வித கஷ்டமும் இல்லை.

☆ வாழ்வகத்தின் இயக்கத்திற்கு ஏதாவது ஒழுங்குமுறைகளைப் பின்பற்றுகின்றீர்களா?

☼ உள்ளக நிர்வாகத்தை எனது கண்காணிப்பிலேயே கொண்டு நடத்துகின்றேன். மற்றும்படி வாழ்வகம் தோற்றம் பெற்ற போதே நிர்வாக செயற்பாடுகளுக்கென ஒரு குழுவும் அமைக்கப் பெற்றது. தற்போது குழுவின் தலைவியாக நான் இருக்கின்றேன். மாதமொரு முறை - அவசர தேவையாயின் இரு முறை இக்குழு கூடி வாழ்வகத்தின் எதிர்கால செயற்திட்டங்கள், கடந்தகால செயற்திட்டங்களில் உள்ள குறைபாடுகள், அவற்றை நிவிர்த்தி செய்யும் வழிமுறைகள் என்பன பற்றி கலந்துரையாடுவார்கள்.

☆ பெண் விடுதலை பற்றி தாங்கள் கொண்டிருக்கும் எண்ணம் பற்றி..........?

☼ பெண்ணுக்கு விடுதலை பெண்ணினால் தான் ஏற்பட வேண்டும். தனக்கு தானே பல விலங்குகளை விரும்பி அணிந்து கொண்டு விடுதலை, விடுதலை என்று கத்துவதில் எவ்வித பிரயோசனமுமில்லை. நாம் தமிழர்கள், எமக்கென ஒரு பண்பாடு, கலாச்சாரம் உண்டு. வெளியுலக பெண்ணியக் கருத்துக்கள் எமக்கு ஒவ்வாதவை. பெண்விடுதலை என்பதன் கீழ் பாலியல் சுதந்திரம் பேசி புனிதமான அந்த உறவை கொச்சைப்படுத்த நான் விரும்பவில்லை. கணவன் மனைவி உறவு மிகவும் புனிதம் வாய்ந்ததாக இருக்க வேண்டும்.

☆ ஒரு தமிழீழப் பெண் எப்படி இருக்க வேண்டும் என நினைக்கின்றீர்கள்?

☼ தனது காலில் தான் தங்கிநிற்பவளாக தன்னை வளர்த்துக் கொள்ள வேண்டும். இதற்கு பெண் அறிவு ரீதியாக நன்கு பயிற்றப்படவேண்டும் எனக் கருதுகின்றேன். பெண்ணின் உயர்விற்கு மனப்பக்குவம் மிகவும் அவசியம். இதனை ஏற்படுத்திக் கொடுப்பது பெண் வளர்க்கப்படும் சூழ்நிலையைப்

பொறுத்தது. எனவே பெற்றோரின் வளர்ப்பு முறை பெண்ணின் உயர்வில் முக்கிய பங்குவகிக்கின்றது. பெண் என்பவள் தனதுகாலில் தான்நிற்கும் அதே நேரம் எமது பண்பாட்டை மதிப்பவளாக, கலாச்சாரத்தைப் போற்றுபவளாக, தான் வாழும் சமூகத்தை மதிப்பவளாக, அச் சமூகத்தின் நலனில் அக்கறையுள்ளவளாக இருக்க வேண்டும். அவ்வாறு இருந்தால் அவளைத் தேடி மதிப்பு தானாகவே வரும். பெண்விடுதலை என்ற பதத்தை நாம் பாவிக்க வேண்டிய தேவையே இருக்காது.

☆ இறுதியாக உங்களிடம் ஒரு கேள்வி. உங்களுக்குப்பின் இவ் வாழ்வகத்தை தொடர்ந்து நடத்துவதற்கு யாரையாவது தீர்மானித்து வைத்திருக்கின்றீர்களா?

☼ பொது நல நோக்குள்ள இரு பிள்ளைகள் ஆசிரியர்களாக எனக்கு தற்போது பலவழிகளிலும் உதவி செய்து வருகின்றார்கள். அவ்வாறான சேவை நோக்கம் கொண்டவர்களின் உதவியுடன் விழிப்புல வலுவிழந்த பிள்ளைகளே வாழ்வகத்தை நடாத்தவேண்டும் என்பதே எனது அவா. இதுநிறைவேறும் என்றே நம்புகின்றேன்.

கேட்கப்பட்ட கேள்விகளுக்கு மிக நிதானமாகவும், தெளிவுடனும் பதிலளித்த வாழ்வகத்தின் தலைவிக்கு நன்றி கூறி நேர்காணலை நிறைவு செய்து கொண்டோம்.

உங்கள் அபிமான எழுத்தாளர்

ஆதிலட்சுமி சிவகுமார்

எழுதும்

புத்தம் புதிய தொடர் நவினம்

## வானக் கருமைகள்

- அடுத்த இதழில் ஆரம்பமாகிறது.

# "மௌனமாய் உன் மனசாட்சியிடம்"

– அலையிசை

மௌனமாய்
உன்மன சாட்சிக்கு மட்டும்
கேட்கக் கூடியதாய்
எத்தனை தடவை
நீ விசும்பி இருப்பாய்........
அவர்களின் தேவை
நீ - இல்லை
உனது உடலும்
உழைப்புமாய் இருக்கையில்
உன் எண்ணங்கள்
குகைக்குள் இருப்பது போன்று
இருண்டே இருக்கும்........
உன் வயிற்றில்
கடிகார முள்ளாய் அசையும்
சிசுவைக்கூட
ஆணா, பெண்ணா என
பேதம் பார்த்து
பேதை உன் நெஞ்சம் துவள
சிசுவை கலைத்திருப்பார்
அப்பவும் கூட
மௌனமாய் மனசாட்சிக்கு
கேட்க கூடியதாய் விசும்பி இருப்பாய்........
கண்ணகியாய், தமயந்தியாய்
நீ வாழ்வதால் தானே
கோவலனும், நளனும்
உருப் பெற்றார்கள்
உன் உணர்வுகளை
உன்னுள் உருக்கியதால் தானே
உன் உரிமைகள்
உனக்கு எட்டாது போயின........
நிமிர்ந்திடு
உன் உயிர்ப்பு
உன் உரிமைகளிற்காயாகட்டும்
''மௌனமாய்
உன் மனசாட்சியிடம்''
கேட்டவைகளை........
உன்னை உதைத்தவர்களிடம்
கேள்!

புத்தக அட்டைப் படங்கள், லேபில்கள்,
ஸ்ரிக்கர்கள், திருமண பூப்பு நீராட்டு
விழா அழைப்பிதழ்கள்
போஸ்ரர்கள்

**மற்றும்**

## அச்சக வேலைகளுக்கு

# அந்திவானம்
# பதிப்பகம்

நாவலர் வீதி,
(கல்லூரி ஒழுங்கை)
யாழ்ப்பாணம்.

மா நகர சபை
யாழ்ப்பாணம்



# கூனல் நிமிர்த்தி வா!

- சிவகாமி

வேதனைகளை
வெள்ளைச் சீலையால் மூடிக்கொண்டு
வீட்டுக்குள் முடங்கிக்கிடக்கும் தங்கையே,
சொல்லி அழ முடியாத உன்
சோகங்களைத் தூக்கி வைத்துவிட்டு
வெளியே வா!
ஏராளம் பணிகள் காத்துக் கிடக்கின்றன!
விதவை என்றும்
விழி விசேடத்துக்கு ஆகாதவளென்றும்
உன்னை நீ ஒதுக்காதே!
உணர்வுள்ள பெண்ணாய் உன்னை
உருவாக்கிக் கொள்!
வாழ்ந்த வீட்டிலேயே வேலைக்காரியாகும்
வழக்கம் உனக்கு வேண்டாம்!
துணையை இழப்பது துயரம் தான்
அதற்காக -
உன்னையே நீ உருவழிப்பதா?
ஞானம் என்பது
புத்தனுக்கு மட்டும் சொந்தமல்ல,
எங்களுக்கும் பிறக்க வேண்டும்!
கூனல் நிமிர்த்திக்
கொடுமைகளை எரிக்க வேண்டும்!
ஆடிவிட்டு அடங்கும் பாம்பாய் நீ
பெட்டிக்குள் சுருண்டு கொண்டால்
நாடும் சிறக்காது உன்
வீடும் விழிக்காது!

# குறுக்கெழுத்துப் போட்டி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 ✳ | 9 | 10 ✳ | 11 | 12 |
| 13 | 14 | 15 ✳ | 16 | 17 | 18 ✳ |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 ✳ |
| 25 | 26 | 27 | 28 | 29 ✳ | 30 |
| 31 | 32 ✳ | 33 | 34 | 35 | 36 |

மேலிருந்து கீழ்

↓ 1—உலகில் பெண்களுக்கான ஒரேயொரு பல்கலைக்கழகத்தின் பெயர்.

3—பெண்ணின் ஏழு பருவங்களில் இதுவும் ஒன்று.

5—நிலத்தில் இருந்து அகழ்ந்தெடுக்கப்படும் கனிமங்களில் ஒன்று.

6—கைவினைத் தொழிலுக்குரிய மூலப்பொருட்களில் ஒன்று. தலை கீழாயுள்ளது.

14—பங்கு என்பது

16—வெள்ளையராட்சியை எதிர்த்த மன்னனின் மனைவியின் பெயரிலுள்ள நடுஎழுத்து விடுபட்டுள்ளதால் பெயர் குழம்பியுள்ளது.

21—இதன் தூய தமிழ் வைப்பகம் குழம்பியுள்ளது.

30—தமிழ் உரிச்சொல் வகையில் ஒன்று.

இடமிருந்து வலம்

→ 1—தீண்டாமையை எதிர்த்து குரல் கொடுத்த இந்திய அறிஞர்.
11—பெண்ணைக் குறிக்கும் ஒரு சொல் மாறியுள்ளது.
13—தமிழீழத்தின் தேசியமரம் மாறியுள்ளது.
16—வெற்றியைக் குறிக்கும் ஒரு சொல்.
19—சிற்றிலக்கிய வகைகளில் ஒன்று குழம்பியுள்ளது.
25—சடப்பொருட்களில் ஒன்று குழம்பியுள்ளது.
33—பஞ்ச பூதங்களில் ஒன்று குழம்பியுள்ளது.

போட்டிக்கான பதில்களை 01 - 08 - 95இற்கு முன்பாக எமக்குக் கிடைக்கக் கூடியதாக எழுதி அனுப்புங்கள்.

அனுப்பவேண்டிய முகவரி:
தமிழீழப் பெண்கள் ஆய்வு நிறுவனம்
இராசவீதி, கல்வியங்காடு, கோப்பாய்.

எம்மிடம் சகலவிதமான அழகுசாதன பொருட்கள் மொத்தமாகவும் சில்லறை யாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

சாந்தா அழகுச் சோலை
65, (29) (கஸ்தூரியார் வீதி)
சந்தோசம் தெரு,
யாழ்ப்பாணம்.

## மங்கள
## வைபவங்களுக்கேற்ற

- கூறைச்சேலைகள்
- காஞ்சிபுரம்
- பட்டுவேட்டி
- கோவில் பட்டுக்குடைகள்

**மற்றும் பல**

புடைவைத் தினுசுகளையும்
உங்கள் எண்ணம் போல்
தெரிவு செய்ய ஏற்றதோர்
எழில் கூடம்

# ஞானம் ஆடையகம்

**54, சோதியா தெரு,**
**யாழ்ப்பாணம்.**

"நாற்று" சிறப்புடன் சேவைகளைத் தொடர
சேரனின் நல்லாசிகள்

மொத்தமாகவும் சில்லறையாகவும் மளிகைப்
பொருட்களை கொள்வனவு செய்ய
நாடவேண்டிய ஒரே நிறுவனம்

# சேரன் பல்பொருள் வாணிபம்

எமது கிளைகள்:

யாழ்ப்பாணம், சுன்னாகம், சாவகச்சேரி, கொடிகாமம், நெல்லியடி, பருத்தித்துறை, உடுப்பிட்டி.

எமது விசேட கிளைகள்

- *மாணவர்களுக்கு*
  சேரன் எழுதுபொருள் வாணிபம் - யாழ்ப்பாணம்
- *விவசாயிகளுக்கு*
  சேரன் வேளாண் இடுபொருள் வாணிபம் - சுன்னாகம்
- *மங்கையர், ஆடவர்கட்கு*
  எழினி புடைவை வாணிபம் - யாழ்ப்பாணம்
- *வாகன உரிமையாளருக்கு*
  சேரன் பல்பொறி உதிரிகள் வாணிபம் - யாழ்ப்பாணம்
- *அழகு சாதன பொருட்களுக்கு*
  எழிற்கூடம் - யாழ்ப்பாணம்
- *மருந்துப் பொருட்களுக்கு*
  சேரன் மருந்து வாணிபம் - யாழ்ப்பாணம்
- *சிறப்பாக சில்லறை விற்பனையில் உங்கள் அபிமான நிறுவனம்*
  யாழ்ப்பாணன் விற்பனை நிலையம் - யாழ்ப்பாணம்